# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 270 ஆவணி 10 ஆம் நாள் புதன்கிழமை 26 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051




**முச்சந்தி முரளி**

ஒருபக்கம் ரெலிபோன் கெத்து காட்ட, அங்கால யானை குத்துக்கரண மெல்லோ அடிக்குது

# ராஜபக்ச அரசுக்கு காத்திருக்கிறது அதிர்ச்சி

## சஜித் பிரமேதாச சூளுரை பல தரப்புகளுடனும் பேச்சு



**கொழும்பு, ஓக. 26**

ராஜபக்சக்கள் அரசை நாம் விரைவில் கவிழ்ப்போம். அதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் மாத்திரம் பேசவில்லை. ராஜபக்ச அரசிலுள்ள அதிருப்தியாளர்களுடனும் பேச்சு நடத்துகின்றோம். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார். 15 >

## பால்காய்ச்சும்போது தீப்பற்றி ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், ஓக.26

மண்ணெண்ணைப் போத்தல் தவறி விழுந்ததால் தீப்பற்றிக் காயங்களுக்கு உள்ளான 15 >

## தவறான முடிவெடுத்து பெண் தீயிட்டுச் சாவு!

யாழ்ப்பாணம், ஓக.26

யாழ்ப்பாணம், கோண்டாவிலில் தவறான முடிவெடுத்துத் தனக்குத் தானே தீயிட்டு இரு 15 >

## 4,00,000 பேரின் தொழிலைப் பறித்த கொரோனா

கொழும்பு, ஓக.26

கொரோனா வைரஸ் நெருக்கடி நிலைமையால் நாட்டில் 4 இலட்சம் பேர் தமது 15 >

## இளைஞர் மீது வாள்வெட்டு!

கிளிநொச்சி, ஓக.26

கிளிநொச்சி, இராமநாதபுரத்தில் இளைஞர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்கான 15 >

## முடிவெடுக்க முடியாது திணறுகிறது யானை!

### தலைவர், தேசியப் பட்டியல் தொடர்ந்து இழுபறியில்

கொழும்பு, ஓக.26

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ மாற்றம் மற்றும் தேசியப் பட்டியல் நியமன விவகாரங்களில் எவ்வித முடிவும் காணப்படாது முடிவுக்கு வந்துள்ளது 10 >

## இந்திய அனுமதி பெறாது 13ஐ நீக்குவது அசாத்தியம்

### வாசுதேவ கூறுகின்றார்

கொழும்பு, ஓக.26

இனப் பிரச்சினைக்குத் தீர்வாகக் கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை இந்தியாவின் அனுமதியின்றி இலகுவாக இரத்துச் செய்ய முடியாது என்று தெரிவித் 15 >

## 13ஐ ஒழிப்பதற்கு இடமளிக்கோம்!

### தமிழ் முற்போக்கு கூட்டணி திட்டவட்டம்

கொழும்பு, ஓக.26

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற ஆளுங்கட்சி உறுப்பினர்களின் கருத்தை ஏற்க முடியாது. 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப் 15 >

## பொலிஸார் மூர்க்கத் தாக்குதல் இளைஞன் மருத்துவமனையில்

### பொய் வழக்குப் பதிவு என்று பெற்றோர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஓக. 26

தெல்லிப்பழை பொலிஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்டதாகத் தெரிவித்து 24 வயது இளைஞன் 15 >

## தூக்க மாத்திரை கொடுத்து கழுத்து நெரித்துக் கொலை

### நெடுந்தீவுப் பெண் கொலை விவகாரத்தில் திடுக்கிடும் தகவல்கள்

யாழ்ப்பாணம், ஓக.26

மன்னாரில் கழுத்து நெரிக்கப்பட்ட நெடுந்தீவைச் சேர்ந்த 15 >

## கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் தொழிலாளி பரிதாபச் சாவு!

### சுன்னாகத்தில் நேற்றுச் சோகம்

யாழ்ப்பாணம், ஓக.26

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பனையில் வீடு திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த கட்டடத் தொழிலாளி 10 >




செலான் வங்கியிடமிருந்து

உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்


அதிகபட்ச முற்பணத் தொகை

ரூ.66,000/-

0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

செலான் தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி

# புலிகளைத் தேடவேண்டிய தேவை அரசுக்கு இல்லை

### காணாமல் போனோர் என்று கூறப்படுவோர் இறந்திருக்கலாம் என்றும் கூறுகின்றார் ஹெகலிய



**கொழும்பு, ஓக. 26**
**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் காணாமல் போயிருந்தால் அவர்களைத் தேட வேண்டிய அவசியம் அரசுக்கு இல்லை என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

இராணுவத்தில் 4 ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் இராணுவத்தில் காணாமல் போனோர் என்பது ஏற்புடைய ஒன்று என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருப்பினும் மனிதாபிமான ரீதியில் காணாமல்போன விடுதலைப் புலி உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவது, குறித்து எதிர் காலத்தில் சிந்திப்பதாகவும் ஆனால், அது அவர்களது உரிமை ஆகாது என்றும் அமைச்சர் கெஹலியரம்புக்வெல சுட்டிக்காட்டியுள்ளார்.

காணாமற்போனோர் குறித்து தேட அரசு தயாராக இருந்தாலும் அவர்கள் பயங்கரவாதத்துடன் தொடர்பு பட்டவர்களாக இருப்பின் அவர்களுக்கான இழப்பீடு தொடர்பில் இரண்டு தடவைகள் சிந்திக்க வேண்டி ஏற்படும் என்றும் குறிப்பிட்டார்.

சாதாரண மக்களாக இருப்பின் இழப்பீடு வழங்கலாம் என்றும் அது போல் காணாமல்போன இராணுவத்தினர்களுக்காகவும் இழப்பீடு வழங்கப்படும் என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

காணாமல்போனதாகக் கூறப்படுவோர் இறந்திருக்கலாம் என்று தங்கள் எண்ணுவதாக குறிப்பிட்ட அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அவர்கள் உயிருடன் இல்லை என்றே கருதுகின்றேன் என்றும் குறிப்பிட்டார்.

இருப்பினும் அதனை உறுதியாகக் கூற முன்னர் கணக்கெடுப்பு ஒன்றை மேற்கொள்ள வேண்டும் குறிப்பாக காணாமல்போனோர் எனக் கூறப்படுவோரில் சிலர் வெளி நாடுகளுக்குச் சென்றுள்ளனர் என்றும் அது தொடர்பாக பரந்துபட்ட விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (து)

# ஹன்சாட்டில் சேர்ந்தது விக்கி எம்.பியின் உரை

### பகிரங்க விவாதத்துக்கு வருமாறு உதய கம்பன்பில சவால்

கொழும்பு, ஓக. 26
நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் நாடாளுமன்ற உரை ஹன்சாட்டில் சேர்க்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், அவரை பகிரங்க விவாதத்துக்கு வருமாறு அமைச்சர் உதய கம்மன்பில நேற்று சவால் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றின் கன்னி அமர்வில் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்து தொடர்பிலேயே அமைச்சர் இந்த சவாலை விடுத்துள்ளார்.

"எனது தாய் மொழியிலும் உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்றும் இந்தநாட்டின் முதல் சுதேச குடிமக்களின் மொழியிலும் நான் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்." என்று சி.வி. விக்னேஸ்வரன் தனது நாடாளுமன்ற உரையில் தெரிவித்து சபாநாயகருக்கு வாழ்த்துக் கூறியிருந்தார்.

இந்தநிலையில், இலங்கையின் ஆதிக் குடிகள் தமிழ் மக்களா என்பது குறித்து தன்னுடன் விவாதிக்க வருமாறு உதய கம்மன்பில அழைப்பு விடுத்துள்ளார்.

விக்னேஸ்வரனின் கருத்திற்கு வெறுமனே எதிர்ப்புத் தெரிவிப்பதால் மாத்திரம் அது பொய்யாக அமையாது. பொய் என நிரூபிப்பதன் மூலம் அது பொய்யாக அமையும். அவர் கூறுவது அப்பட்டமான பொய் என நிரூபிக்க நான் தயார். ஆகவே இலங்கையின் ஆதி குடிகள் தமிழ் மக்களா என்பது குறித்து என்னுடன் விவாதிக்க வருமாறு சவால் விடுக்கின்றேன். என்று உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (து)

## முல்லை கற்சிலைமடுவில் பண்டார வன்னியன் நிகழ்வு



மாவீரன் பண்டாரவன்னியன் முல்லைத்தீவு கோட்டையை ஆங்கிலேயரிடம் இருந்து கைப்பற்றிய வெற்றி நாள் நிகழ்வுகள் 217 ஆவது ஆண்டு நிகழ்வு முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கற்சிலைமடு பண்டாரவன்னியன் சிலை அமைந்துள்ள பகுதியில் சிறப்புற நடைபெற்றுள்ளது

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கலாசார விழா ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாவீரன் பண்டாரவன்னியனின் திருவுருவப்படம் ஊர்தியாக சிலை அமைந்துள்ள வளாகத்துக்குள் எடுத்து வரப்பட்டு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு பண்டாரவன்னியன் நினைவு தூபிக்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர், கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். (து)

## புதிய அரசமைப்பு தொடர்பில் மதத்தலைவர்களே கவனியுங்கள்!

### நளின் பண்டார கோரிக்கை

கொழும்பு, ஓக. 26
புதிய அரசியலமைப்பு திருத்தத்தில் உள்ளடக்கப்படும் விடயங்கள் தொடர்பில் சர்வ மதத்தலைவர்கள், சிவில் அமைப்புகள் மற்றும் நிபுணர்கள் உள்ளிட்ட அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டாம் புனேகபாகு மன்னனின் அரசசபை மண்டபத்தை இடித்தமை தொடர்பில் குருநாகல் நகர பிதாவை கைது செய்வதற்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட போதிலும், அதற்கு மேன்முறையீட்டின் மூலம் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை உத்தரவு மேலும் நீடிக்கப்பட்டுள்ள தாக செய்திகள் வெளிவந்துள்ளன. இந்தநிலையில் இந்த செயற்பாட்டின் ஊடாகவே அரசின் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கூற்றிற்கான விளக்கத்தைப் புரிந்துக் கொள்ள முடிகிறது.

தொல்பொருள் பாதுகாப்பு சட்டத்தின் பலம் அனைவரும் அறிந்த விடயம். தொல்பொருளியல் சிறப்புரிமை மிக்க பொருள்களுக்கு சிறு சேதங்களை ஏற்படுத்தியவர்கள் கூட சிறைவைக்கப்பட்டுள்ளனர். ஆனால் அமைச்சர் ஜொன்ஷ்டன் பெர்னாண்டோ கூறியதைப் போன்றே குருநாகல் நகரபிதாவுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. தொல்பொருளியல் சக்கரவர்த்தியான எல்லாவல மேதானந்த தேரரதும் நாட்டு மக்களதும் நம்பிக்கை தோல்வியுற்றுள்ளது. (து)

## முல்லைத்தீவில் நாளை தொழிற்சந்தை

முல்லைத்தீவு, ஓக. 26
முல்லைத்தீவு மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்றிருக்கும் இளையோருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் மனித வலு மற்றும் வேலைவாய்ப்புதிணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தொழில் சந்தை நிகழ்ச்சித் திட்டம் நாளை வியாழக்கிழமை காலை 8.30மணிக்கு கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தத் தொழில் சந்தையில் சுற்றுலா, நிதி, கட்டட நிர்மாணம், சந்தைப்படுத்தல் மற்றும் தேசிய இளைஞர் படையணி ஆகிய துறைகளை உள்ளடக்கிய பத்து கம்பனிகள் கலந்துகொள்ளவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டச் செயலக மனித வலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர். (து222,19)

# மு.கா. - இந்தியத் தூதரக அதிகாரிகள் சந்திப்பு

கொழும்பு, ஓக. 26
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்திய தூதரகத்தின் உயர் ஸ்தானிகளுக்கும் இடையிலான சிநேகபூர்வமான சந்திப்பு இலங்கைக்கான இந்திய தூதரகத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கௌரவ தலைவர் அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது.

சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக அதன் தலைவர் ரவூப் ஹக்கீம், பிரதித் தலைவர் அல்ஹாபிஸ் நஸீர் அகமட் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம் மற்றும் தௌபிக் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்திய தூதரகத்தின் உயர் ஸ்தானிகரான கோபால் பக்லே , பிரதி உயர் ஸ்தானியான வினோத் கே. ஜோகப் மற்றும் திருமதி பானு பிரகாஸ் (தலைமை அரசியல் மற்றும் மேம்பாட்டு ஒத்துழைப்பாளர்) ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி, அதாவது விமான நிலைய விஸ்தரிப்பு, இலங்கை இந்திய பயணிகள் போக்குவரத்து சேவைகளை மேம்படுத்துவது தொடர்பாகவும், இந்தியதுணைத்தூதரகம் கைத்தொழில் பேட்டைகள் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள் அமைப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. தவிர, தற்போதைய அரசியல் நிலவரம் மற்றும் இந்தியாவின் எதிர்கால ஒத்துழைப்பு தொடர்பிலான பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (து)

# விக்கியின் உரையை நீக்கினால் சர்வதேசத்திடம் முறையிடுவோம்

## அரசை எச்சரித்தார் சிவாஜி

**யாழ்ப்பாணம், ஓக. 26**

**தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி விக்னேஸ்வரன் நாடாளுமன்ற முதல்நாள் அமர்வில் ஆற்றிய உரை சிங்கள பௌத்த பேரினவாதிகளைக் கொதித்தெழ வைத்துள்ளது.**

அந்த உரையை நாடாளுமன்றப் பதிவேட்டிலிருந்து நீக்கினால் சர்வதேச சமூகத்திடம் முறையிடுவோம் என வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம் எச்சரித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

எங்களுடைய வரலாற்றை, எங்களுடைய விருப்பங்களை நாம் தெரிவிப்பது உங்களுக்குக் கொதிப்பை ஏற்படுத்துகிறதென்றால் எங்களை விட்டு விடுங்கள். தமிழ் மொழி தொன்மையான மொழி. செம்மொழிகளில் தமிழ் மொழியும் ஒரு மொழி என்று அங்கீகரிக்கப்பட்ட பின்னர் உலகத்திலே பல நிறுவனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அது மூத்த குடிமக்களுடைய மொழி என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதை நாடாளுமன்றில் விக்னேஸ்வரன் கூறும்போது கூக்குரலிடுவதும் நாடாளுமன்றப் பதிவேட்டில் இருந்து அதை நீக்குவது தொடர்பில் பரிசீலிப்பதாக சபாநாயகர் கூறுவதும் கீழ்த்தரமான ஒரு ஜனநாயக முறைக்கு விரோதமான செயற்பாடாகவே நான் கருதுகின்றேன். நீங்கள் நீக்குவதோ வைத்திருப்பதோ எதுவாக இருந்தாலும் தமிழ் மொழி மூத்த மொழியாகவே தான் இருக்கும். அவ்வாறு இதை நீக்கினால் நாங்கள் சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்திடமும் அதே போல் கொமென்வெல்த் நாடாளுமன்ற ஒன்றியத்திடமும் சர்வதேச சமூகத்திடம் முறையிடுவோம் - என்றார். (ப)

# தடைப்பட்ட அபிவிருத்திகள் வருட இறுதிக்குள் முடிவுறும்

## யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 26

கொரோனாத் தொற்றால் யாழில் தடைப்பட்டிருந்த அபிவிருத்தி வேலைகள் தற்போது துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

யாழ் மாவட்டத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் 2 பிரதான திட்டங்கள் அரசினாலும் மேலும் ஒரு திட்டம் உலக வங்கியின் நிதியீட்டத்திலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதனைவிட பல திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன. "சப்ரிகம" செயற்றிட்டத்தின் கீழ் மாவட்டத்தில் ஒவ்வொரு கிராம அலுவர் பிரிவிலும் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதேபோல கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 57 திட்டங்கள் இனங்காணப்பட்டு வேலைகள் இடம்பெற்றுள்ளன. கொரோனாத் தொற்று மற்றும் நிலைமாறுகாலப் பகுதியில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணத்தால் திட்டங்களைச் சீராக நடத்துவதில் சிறு தடங்கல் ஏற்பட்டிருந்தது. எனினும் மிகுதி நான்கு மாத காலப்பகுதிக்குள் இந்தத் திட்டங்களை முடிவுறுத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. உலக வங்கியின் நிதியீட்டத்தில் தந்திரோபாய நகர அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. வீதிப் போக்குவரத்து முகாமைத்துவம், பொதுப் போக்குவரத்துக் கட்டமைப்பு வசதியை மேம்படுத்தல், வடிகாலமைப்புத் தொகுதிகளை மேம்படுத்தல், நகரைத் தரமுயர்த்தல், கலாசாரப் பாரம்பரியம் மிக்க இடங்களைப் பேணிப் பாதுகாத்தல்., யாழ்ப்பாண மாநகர சபையை வலுப்படுத்தல் என நான்கு கட்டங்களாக இந்தத் தந்திரோபாய நகரத் திட்டமானது நடைமுறைப்படுத்தப்படுகிறது - என்றார். (ப-111)

*மாணவர்களுக்கான*

### இ.போ.ச. சேவையை உடன் ஆரம்பிக்குக

பாடசாலை மாணவர்களுக்கான இலங்கை போக்குவரத்துச் சபையின் சேவைகளை விரைவில் ஆரம்பிக்குமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களுக்கான தனியார் பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கான அரச பஸ் சேவை இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

பாடசாலைகள் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டு தற்போது முழுமையாக நடத்தப்படுகிறது. மாணவர்கள் பாடசாலை. ஆரம்பிக்கும் நேரத்துக்குள் செல்ல வேண்டும் என்பதற்காக தனியார் பஸ்களில் சிரமங்களுக்கு மத்தியில் பயணிக்கின்றனர். எனவே அரச பஸ் சேவையை விரைந்து ஆரம்பிக்க வேண்டும் என்று பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ப-9)

### நிர்வாக சபை தெரிவு

யாழ்ப்பாணம், ஓக. 26

யாழ் வை.எம்.சீ.ஏ நிறுவனத்தின் 130 ஆவது ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 22ஆம் திகதியன்று நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் நிர்வாக சபைத் தெரிவும் நடைபெற்றது.

இதில் தலைவராக இ.வினோத், உபதலைவராக து.விமல்ராஜ் மற்றும்த.யூதராஜாவும், பொருளாளராக று.ஜெவ்றி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# ஜனாஸா எரிப்பு விவகாரத்தில் அரசு தொடர்ந்தும் விடாப்பிடி!

## ரிஷாத் எம்.பி. கவலை

முல்லைத்தீவு, ஓக. 26

ஜனாஸா எரிப்பு விடயத்தில், அரசாங்கம் தொடர்ந்தும் விடாப்பிடியாக இருந்து வருகிறது. இது தொடர்பிலான கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டு, மருத்துவர்களின் மேல் பழி போடப்பட்டுள்ளது என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார். முல்லைத்தீவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் மேலும் தெரிவித்த அவர்;

முஸ்லிம்களின் உணர்வுகளை மதிக்காமல், மதக் கடமைகளை இல்லாமலாக்கவே இவ்வாறு செயற்படுகின்றார்கள். மருத்துவர்கள் உள்ளடங்கிய நிபுணர் குழுவொன்றை நியமித்து, ஆராய வேண்டுமென்று விடுக்கப்பட்ட கோரிக்கைகள் கூட மறுதலிக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்றில் 2/3 அல்லது 5/6 பெரும்பான்மை ஆசனங்களோ அல்லது 225 பிரதிநிதிகளையயும் கூட ஆளுங்கட்சி பெற்றாலும், இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்ற நம்பிக்கைகொண்டவர்கள் நாங்கள். அனைத்தையும் ஆள்பவன் அவனே! என்று முழுமையான நம்பிக்கையுடன் நாம் வாழ்வதாலேயே, இன்னும் பொறுமை காக்கின்றோம். எனவே, இந்த அநியாயச் செயலை இனிமேலாவது நிறுத்துங்கள் - என்றார். (ப)

# பலமான பொருளாதாரம் 2 வருடங்களில் அமையும்

## உறுதியுடன் கூறுகிறார் கோத்தா

பலமான தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு விவசாய விளைச்சல்களை அதிகரிப்பதற்கான காலம் உருவாகியுள்ளதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அதற்காக பலயோசனைகளையும் முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பலமான தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு விதை மற்றும் கன்றுகள் உற்பத்தி உரப்பாவனை, விவசாயப் புத்தாக்க ஆராய்ச்சிகள், களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து ஆகிய அனைத்துத் துறைகள் குறித்தும் கவனம் செலுத்தி எதிர்வரும் இரண்டு வருடங்களில் சவாலான இலக்கை வெற்றிகொள்ள வேண்டும். நாட்டின் வருடாந்த உருளைக்கிழங்கு அறுவடை 80,000 தொன்களாகும். நுகர்வோர் தேவை 250,000 தொன்களாகும். உருளைக் கிழங்கை இறக்குமதி செய்யாது உள்நாட்டிலேயே தேவையை நிறைவேற்றிக்கொள்வதற்கு விவசாயிகளை வலுவூட்ட வேண்டும்.

விதைகள் மற்றும் கன்றுகள் உற்பத்திக்கு நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்குத் தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

உயர்தரம் வாய்ந்த பசளைகளை உரிய முறையில் பயன்படுத்துவதற்கும் சுகாதாரமான வினைத்திறன் வாய்ந்த தலைமுறை ஒன்றை உருவாக்குவதற்கும் சேதனப் பசளை பயன்பாட்டிற்கு மாறுவது குறித்தும் கொள்கை சார்ந்த தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ப)

# சமுர்த்தியை மாற்றுங்கள்

## ஜனாதிபதி கோத்தாபய பணிப்பு

கொழும்பு, ஓக. 26

சமுர்த்தி நிவாரணத்தை குறைந்த வருமானம் பெறும் மக்கள் பலப்படுத்தும் செயற்திட்டமாக மாற்றுங்கள் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வறுமையை ஒழிப்பதற்கு முன்னுரிமை வழங்கி சமுர்த்திச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சமுர்த்திப் பயனாளிகளை நிவாரணம் பெறும் மனநிலையிலிருந்து மீட்டெடுத்து நுண்தொழில் முயற்சியாளர்கள் என்ற நிலைக்கு மாற்றும் வேலைத்திட்டத்தை உடனடியாகத் திட்டமிட வேண்டும்.

வலுவூட்டப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளை சமுர்த்திச் செயற்றிட்டத்தில் உள்வாங்கி நாட்டுக்கு நன்மை கிடைக்கும் வழிமுறை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். நுண்நிதி கடன்கள் மூலம் பிரதிபலனை வழங்குவதற்கு ஒழுங்குபடுத்தல் அவசியம். நிதி இயலுமை குறித்து விளங்கிக்கொள்வது நுண்நிதி நிறுவனங்களின் மிக முக்கிய பணியாகும்-என்றார். (ப)



கொரோனா அச்சுறுத்தலின் பின்னர் மன்னாரைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள், இளையோரின் பாதுகாப்புத் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்றுக் காலை 10.30 மணியளவல் மன்னார் மாவட்டச் செயலர் தலைமையில் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது (ப-56)

# உறவுகளின் போராட்டத்துக்கு தமிழ்க் கூட்டமைப்பும் ஆதரவு

## செல்வம் எம்.பி. அறிவிப்பு

மன்னார், ஓக.26

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தின் போது, வடக்கு- கிழக்கைச் சேர்ந்த காணாமல் ஆக்கப் பட்டோர்களது உறவுகளால் முற்னெடுக்கத்திட்டமிட்டிருக்கும் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற கூட்டமைப்பின் உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்ததாவது:

போர் முடிவுக்கு வந்ததாகக் கூறப்பட்டு பத்து வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் படையினரின் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட பகுதியில் உறவினர்க ளால் கையளிக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் இன் றுவரை அவர்கள் தேடித்திரிகிறார்கள். வலிந்து கானாமல் ஆக்கப்பட்டவர்க ளுக்கான நீதி கோரி வருடக்கணக்கில் போராடி வரும் மக்களை பேரினவாத அரசு கண்டு கொள்ளவில்லை. சர்வதே சமூம் இலங்கை அரசின் மாயைக்குள் விழுந்துவிட்டதா என்று சந்தேகம் எழுகி றது ? எமது மக்களின் கண்ணீருக்குத் தீர்வு வேண்டும். காலம் கடத்தி பாதிக்கப் பட்ட மக்கள் அனைவரையும் இல்லா மல் செய்வது அரசின் நோக்கமா? தமிழ் மக்களின் பேரிழப்புக்குக் காரணமான இந்த அரசு தமிழ் மக்கள் விடயத்தில் இழைத்த தவறை மீண்டும் இழைக்க நினைக்கக் கூடாது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று பொறுப்புக் கூற வேண்டும் - என் றார். (ப-213)

# ம.க.அபிவிருத்தி மன்றம் கல்விக்கான கற்பகத்தரு

## மனோ எம்.பி. பாராட்டு

கொழும்பு, ஓக. 26

மலையகக்கல்வி அபிவி ருத்தி மன்றம் கல்விக் கான ஒரு கற்பகத்தரு என்று த.மு.கூ தலைவ ரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் பாராட் டியுள்ளார்.

அந்த மன்றத்தின் 14 ஆவது ஆண்டு நிறை வையொட்டி மனோ கணேசன் வெளியிட்டி ருக்கும் செய்திக்குறிப் பில் மேலும் உள்ளதா வது;

கற்பகத்தரு என்றால் வேண்டுவதைத் தரும் தேவலோக மரம். அதா வது பன்முகப் பயனைத் தரும் ஒரு விருட்சம் என புராணக் கதைகளில் கூறப்படுகிறது. அது போல் மலையக மாண வர்களுக்கு பற்பல பணி களைப் புரியும் மலைய கக் கல்வி அபிவிருத்தி மன்றம், தமது களப்பணி களால், எமது கல்வி கற் பகதருவாகப் போற்றப் பட வேண்டும் என் நான் விரும்புகி றேன் - என் றுள்ளது. (ப)

# சோமாலியாவாக மாறாமல் காப்பாற்றப்பட்டது இலங்கை

## கமால் குணரத்ன பெருமிதம்



கொழும்பு, ஓக. 26

சோமாலியாவைப் போன்ற ஒரு நிலைமை நாட்டில் ஏற்பாமல் தடுக்கப்பட்டுள்ளது என்று பாது காப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள் ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

பாதாள உலகச் செயற்பாடுகளை ஒழித்தல், போதைப் பொருள் பாவனையை ஒழித்தல் மற்றும் திட்டமிட்ட குற்றச் செயல்கள் போன்றவற்றை முற்றாக ஒழிக்க வேண்டும். நாட்டில் பெரிய சிறைச்சாலையாகக் கரு தப்படும் வெலிக்கடைச் சிறைச்சாலை மற்றும் மகசின் சிறைச்சாலை, ரிமாண்ட் சிறைச்சாலை உள்ளிட்டவற் றில் தினமும் கைத்தொலைபேசிகளும் போதைப் பொருள் பொட்டலங்களும் சிம் அட்டைகளும் கைப் பற்றப்படுகின்ற பின்னணியிலேயே பொலிஸ் அதிர டிப்படையினர் களமிறக்கப்பட்டுள்ளனர். எனவே இலங்கை சோமாலியாவைப் போன்ற ஒரு நாடாக மாறவிருந்த சந்தர்ப்பத்தில் முறையான வேலைத்திட் டங்களை முன்னெடுத்ததன் மூலம் அவ்வாறான தொரு நிலைமை ஏற்படாமல் தடுத்திருக்கின்றோம் - என்றார். (ப)

# பொருளாதார நெருக்கடியிலும் அரசமைப்பு திருத்தம் தேவையா?

## திஸ்ஸ அத்தநாயக்க எம். பி. கேள்வி

கொழும்பு, ஓக. 26

நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்குத் தீர்வைக் காணுவதற்கு முன்னர் புதிய அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதற் கான காரணம் என்ன ? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாள ரும் , நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பி னார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் ததாவது:

கொவிட் -19 வைரஸ் பரவல் காரணமாக நாடு பெரும் பொருளாதார நெருக்க டியை எதிர்நோக்கி வருவதுடன், நாட்டு மக்கள் பெரும் வாழ்வாதாரப் பிரச்சி னைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்தச் சவால்களுக்கு முகங்கொடுப்பது தொடர்பில் அரசாங்கத்திடம் வேலைத்திட் டங்கள் இல்லாவிட்டாலும் நம்பிக்கையா வது இருக்க வேண்டும். ஆனால், அது தொடர்பில் எதனையும் கூறாது உடனே 19 ஆவது அரசமைப்புத் திருத் தத்தை நீக்குவது தொடர்பிலே ஜனாதிபதி கருத்துத் தெரிவித்திருந்தார். தற்போது நாடு இருக்கும் நிலைமையில் அரச மைப்புத் திருத்தம் தான் அவசியமா னதா? - என்றார். (ப)

# வங்குரோத்து அரசியலை கைவிடுங்கள்

## மஸ்தான் எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 26

இனவாதத்தைத்தோளில் தூக்கிக்கொண்டு மக்கள் மத்தியில் செல்கின்றவர் கள் மக்களைப் புறக் கணிக்கப்படுகின்ற நிலைமையை எம்மால் அவதானிக்க முடிகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ் தான் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது;

இனவாதத்தை அடிப்ப டையாக வைத்து வங்கு ரோத்து அரசியலைச் செய்பவர்கள் அதைக் கைவிட்டு மக்களுக்குத் தேவையான காத்திர மானஅரசியலைச்செய்ய முன்வர வேண்டும். இன,மத, பிரதேச அரசி யல் வேறுபாடுகளுக்குக் அப்பால் நின்று மனித நேயம் மிக்க சேவை களை நாம் ஆற்றுகின்ற பொழுது எம் மீது சில வங்குரோத்து அரசியல் வாதிகள் காழ்ப்புணர்ச்சி கொண்டு கருத்துக்களை உமிழ்ந்து வருகின்ற மையை எமது மக்கள் தெளிவாக உணர்ந்து வைத்துள்ளனர் - என் றார். (ப)

# வடக்கு ஆளுநர்கள் சரியில்லையாம்

## கூறுகிறார் டக்ளஸ்

முன்னாள் ராணுவ அதி காரி சந்திரசிறிக்குப் பின்னர் வடக்கில் நிய மிக்கப்பட்ட எந்தச்சிவில் அதிகாரிகளும் தமது வேலையை ஒழுங்கா கச் செய்யவில்லை என்று கடற்றொழில் மற் றும் நீரியல் வளங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித் ததாவது;

வடக்கில் இராணுவ அதி காரியை ஆளுநராக நியமிக்கும் நிலைப்பாடு இதுவரை அரசிடம் இல்லை. எனினும் முன் னாள் ஜெனரல் சந்திர சிறியை ஆளுநராக நியமிக்குமாறு இந்த அரசாங்கம் வந்தவுடன் நான் கோரியிருந்தேன். ஏனெனில் அவருக்குப் பின்னர் வந்த எந்தச் சிவில் அதிகாரிகளும் தமது வேலையை ஒழுங் காகச் செய்யவில்லை- என்றார். (ப-110)

# பின்னோக்கிப் பாய்கிறது இலங்கை அரசாங்கம்!

## மங்கள குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 26

மத்திய வங்கி அரசியல் மய மாவதைத் தடுக்கும் நோக் கில் நாணயச் சட்டத்தைப் பதிலீடு செய்வதற்காகக் கடந்த காலத்தில் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்ட வரைவு பிரேரணை தற்போது முழுமையாகக் கைவிடப்பட்டுள்ளது. அர சாங்கத்தின் 'பின்னோக்கிய பெரும் பாய்ச்சலின்' ஊடா கப் புறந்தள்ளப்பட்ட மிக முக்கியமான சீர்திருத்தம் இதுவாகும் என்று முன் னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர சுட்டிக்காட்டியுள் ளார்.

இது தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் மேலும் தெரிவித்துள்ளதா வது;

இலங்கை மத்திய வங்கி அர சியல் மயப்படுத்தப்படுவ தைத் தவிர்க்கும் நோக்கில், 70 வருடகாலம் பழமை யான நாணயச்சட்டத்தைப் பதிலீடு செய்வதற்காக என் னால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு பிரேரணை தற்போது முழு மையாகக் கைவிடப்பட்டி ருக்கிறது. இந்தப் புதிய அரசாங்கத்தால் முன்னெ டுக்கப்படும் 'பின்னோக்கிய பெரும் பாய்ச்சல்' முயற்சி யில் கைவிடப்பட்ட மற் றொரு மிக முக்கியமான சீர்திருத்தம் இதுவாகும். இது குறித்து அரசாங்கம் வெட்கமடைய வேண்டும் - என்றுள்ளது. (ப)

# காணாமற்போன மாடு கொல்களத்தில் மீட்பு

## வவுனியாவில் சம்பவம்



வவுனியா, ஓக. 26

வவுனியா நெளுக்குளம் பகு தியில் கடந்த சில தினங்க ளுக்கு முன்னர் காணாமல் போன மாடு, இறைச்சிக்காக வெட்டப்படவிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நெளுக்குளம் பகுதி யைச் சேர்ந்த ஒருவருடைய மாடு காணாமல் போயுள்ளது. அந்த மாட் டைத் திருடியவர் அதை இறைச்சிக் காக விற்றுள்ளார்.

வெட்டுவதற்குத் தயாரான நிலையில் குறித்த மாடு கொல்களத்தில் நிற்ப தாக உரிமையாளர் எப்படியோ தெரிந்து கொண்டார். வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப் பாட்டை மேற்கொண்டார். மாடு மீட் கப்பட்டு வவுனியா பொலிஸ் நிலை யம் கொண்டுசெல்லப்பட்டது. மாட் டைத் திருடி இறைச்சிக்கு விற்றார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். மாடுகள் திருடப்படு வது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் 100க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப-18)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பலஸ்தீனம் - ஜியோனிசம் - தமிழர்

இன்று உலகில் மிக மோசமான வன்முறைகள் நிகழும் பகுதியாக இஸ்ரேல் பலஸ்தீனத்தின் காசா, மேற்குக்கரை உள்ளிட்டவை இருக்கின்றன. இந்த அமைதியற்ற நிலைக்கு யூதர்களின் ஆக்கிரமிப்பு மனோபாவம் ஒரு காரணமென்றால், பலஸ்தீனர்களின் சுயநலமும், அறியாமையும்தான் அதைவிட முதன்மையான காரணங்கள்.

19ஆம் நூற்றாண்டு வரையில் யூதர்களுக்கு என்று தனியான நாடு இல்லை என்பது அனைவரும் அறிந்ததே. உலகம் முழுக்கச் சுற்றிய யூதர்கள் தமக்கென தனிநாட்டை அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டு பலஸ்தீனத்தை இலக்கு வைத்தனர். அதற்காக அவர்கள் வகுத்த திட்டம் தான் 'ஜியோனிசம்'. அதாவது பலஸ்தீனர்களிடம் இருக்கும் நிலத்தை அவர்கள் எதிர்பார்ப்பதை விட அதிக விலைகொடுத்து வாங்கி 'நில வங்கியொன்றை' உருவாக்கி அதை தனிநாடாக அறிவித்து பலஸ்தீனர்களை ஒடுக்குவதே யூதர்களின் திட்டம். பணத்தால் யூதர்கள் தம் நிலத்தைக் கொள்வனவு செய்து தம்மை நிரந்தர அடிமைகளாக – நாடற்றவர்களாக ஆக்கவுள்ளார்கள் என்பதை அப்போதைய பலஸ்தீனர்கள் அறியவேயில்லை. கிடைத்தவரை லாபம் என்ற எண்ணத்தில் தமது நிலத்தை கொள்ளை விலைக்கு விற்றனர்.

இன்றைய தமிழர்களின் நிலைகூட பரிதாபத்துக்குரிய பலஸ்தீனர்களின் அன்றைய நிலையை ஒத்ததாகவே காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் ஜியோனிசத்தை நடைமுறைப்படுத்திய பெருமை சிறிலங்கா சுதந்திரக் கட்சியையே சாரும். நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வரலாற்றில் என்றுமேயில்லாத வகையில் அந்தக் கட்சிக்குக் கிடைத்த ஓர் ஆசனம்தான் இந்தப் பத்தியில் ஏலவே குறிப்பிட்ட ஜியோனிசத்தின் முதல் படியும் பெரும் அடியும்.

பொதுத் தேர்தலின்போது சுதந்திரக் கட்சியால் பல்வேறுபட்ட வாக்குறுதிகள் வடக்கு மக்களுக்கு குறிப்பாக யாழ்ப்பாண மக்களுக்கு வழங்கப்பட்டன. 'வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும், ஒரு லட்சம் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படும், பட்டதாரிகளுக்கான நியமனங்கள் கிடைக்கும் என்பன அந்த வாக்குறுதிகளில் சில. இவற்றில் எதுவும் இதுவரையும் நிறைவேற்றப்படவில்லை. ஆகப்பிந்தியதாக யாழ்ப்பாணத்தில் பொருத்து கொங்கிறீட் வீடுகள் அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட திட்டமும் தற்போது கிடப்பில் போடப்பட்டது. ஒரு லட்சம் வேலை வாய்ப்புக்களும் வடக்கை விட்டுப் பறிபோகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பட்டதாரிகள் நியமனத்திலும்கூட வடக்கைச் சேர்ந்தவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். ஆக, சுதந்திரக் கட்சியின் 'தேர்தல் கால' வாக்குறுதிகள் எவையும் மெய்ப்பிக்கப்படவில்லை. குறைந்தபட்சம் மெய்ப்பிக்கப்படும் தூரத்திலாவது இல்லை. எனினும், இந்தப் புறக்கணிப்புக்களுக்கு சுதந்திரக் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத்தில் தெரிவான வேட்பாளரோ அல்லது அந்தக் கட்சியினரோ சிறு எதிர்ப்பைக்கூட வெளியிடவில்லை. அரசு என்ன செய்கின்றதோ அதைக் கைகட்டி, வாய்மூடி அவதானிக்கும் பேசா மடந்தைகளாக அவர்கள் ஆகியுள்ளனர்.

ஈழத் தமிழர்கள் சுதந்திரக் கட்சியால் எதிர்கொண்ட அவலங்கள் ஒன்றல்ல இரண்டல்ல. சுதந்திரக் கட்சியின் சார்பிலான யாழ்.மேயரான அல்பிரட் துரையப்பாவின் கொலையோடு ஆரம்பித்த விடுதலைப் போராட்டம், அதே சுதந்திரக் கட்சியின் தலைமையின் மஹிந்த அரசால் மிகப்பெரிய இனப்படுகொலையோடு முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. யூதர்களின் (இஸ்ரலின்) ஜியோனிசத்தால் தமக்கு எவ்வளவு பெரிய ஆபத்துண்டு என்று உணராத பலஸ்தீனர்கள் அதை அங்கீகரித்ததுபோல தமிழர் விரோதப் போக்குடைய சுதந்திரக் கட்சிக்கு எம்மவர்கள் ஆணையை வழங்கிவிட்டனர். ஆனால் அவை கொள்கை ரீதியான வாக்குகள் அல்ல. உரிமைக்காக வாக்களித்து எதுவும் கிடைக்காத விரக்தியில் இம்முறை அபிவிருத்திக்காக வாக்களித்தால் ஏதும் நடக்கலாம் என சுதந்திரக் கட்சியின் பசப்புவார்த்தைகளைக் கேட்டு வாக்களித்தவர்கள் இப்போது உரிமையும் இல்லாமல், அபிவிருத்தியும் கிடைக்காமல் ஏமாந்துபோய் நிற்கிறார்கள். 'அரசியல்வாதிகள் பேச்சு தேர்தல் முடிந்தால் போச்சு'.

மீண்டும் அவர்கள் கைகளை உயர்த்தி வாக்குக்கேட்டு வரும்வரையில் காத்திருப்பதைத்தவிர வேறென்ன செய்யமுடியும். தமிழர்களுக்கு இதுவும் ஒரு நல்ல படிப்பினை.

# மாகாணத் தேர்தலில் அரசியல் வாரிசுகள்

## மண்கவ்வியவர்களும் போட்டி

**கொழும்பு, ஓக. 26**

**2021ஆம் ஆண்டு முற்பகுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் மாகாணசபைத் தேர்தலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் மற்றும் அரசியல் வாரிசுகளும் போட்டியிடவுள்ளனர் என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, சுதந்திரக்கட்சி உட்பட மேலும் சில கட்சிகளின் சார்பிலேயே வாரிசுகள் களமிறங்குகின்றனர். தற்போதிருந்தே அவர்கள் தேர்தலுக்கு தயாராகிவருகின்றனர் எனத் தெரியவருகின்றது.

மஹிந்த அணியில் போட்டியிட்டு ஊவா மாகாணசபைக்கு தெரிவாகியிருந்த முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சாவின் மகன் இம்முறை ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ஊவாவில் போட்டியிடவுள்ளார்.

அமரர் சந்திரசேகரனின் மகள் அனுசா சந்திரசேகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். இராஜரட்னத்தின் மகன் ஜனா ஆகியோர் மத்திய மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர். அரசியல் பிரமுகர்களின் உறவினர்களும் போட்டியிடுகின்றனர்.

அதேவேளை பொதுத்தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த முக்கிய அரசியல் பிரமுகர்களும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடவுள்ளனர். (ம-44)

## 35 இராஜாங்க அமைச்சுகளின் புதிய செயலர்கள் விவரம்!

35 இராஜாங்க அமைச்சுகளின் புதிய செயலர்கள் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த 19ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் குறித்த நியமனங்களுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியபோதிலும் அதன் வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினமே விடுக்கப்பட்டது.

குறித்த வர்த்தமானிக்கு அமைய நிதி, மூலதனச் சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சின் செயலராக ஆர்.எம்.ரத்னாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். அதேநேரம், சமுர்த்தி வதிவிட பொருளாதார, நுண் நிதிய, சுய தொழில் வியாபார அபிவிருத்தி மற்றும் கீழுழைப்பு பயன்பாட்டு அரசாங்க வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளராக டபுள்யூ.எம்.என்.பி.ஹபுஹின்ன நியமிக்கப்பட்டுள்ளார். தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாடு இராஜாங்க அமைச்சின் செயலாளராக எச்.டி.கொடிகார, கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப்பொருள் கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளராக ரஞ்சித் அபேசிறி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். அதேநேரம், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலாளராக டி.பி.ஜி.குமாரசிறி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சின் செயலாளராக பி.சி.கருணாரத்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம)

## இராணுவ வாகனம் மோதி பெண் காயம்

கிளிநொச்சி, ஓக. 26

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் மதியம் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் சென்ற பெண் வீதியின் மறுகரைக்கு திரும்ப முற்பட்டபோது, பின்னால் வந்த இராணுவத்தின் பிக்கப் மோதியதில், ஆனந்தபுரத்தைச் சேர்ந்த விக்னேஸ்வரன் தசாயினி (வயது 35) என்பவர் காயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ,5,6)

## மணல் அகழ்வுக்கு எதிராகப் போராட்டம்

முல்லைத்தீவு, ஓக. 26

சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துமாறு வலியுறுத்தி இரணைமடு விவசாய சம்மேளனத்தால் நேற்று போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேச சபை முன்பாக இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கவனவீர்ப்புப் பேரணி கிளிநொச்சி மாவட்டச் செயலகம் வரை சென்றது. தொடர்ந்து மாவட்டச் செயலருக்கு மனுவொன்றும் கையளிக்கப் பட்டது.

இரணைமடு குளத்தின் கீழ் உள்ள கனகராயன் ஆற்றப்படுக்கையில் மிக மோசமான முறையில் மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது என்று வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. செருக்கன் பகுதியில் அமைக்கப்படும் உப்பளத்தின் பணிகளை நிறுத்தி செய்கை நிலங்களைப் பாதுகாத்துத் தருமாறும் குறித்த போராட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டுள்ளது. இதன்போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த இரணைமடு



விவசாய சம்மேளனத்தின் செயலாளரும் கரைச்சி பிரதேச சபை உறுப்பினருமான எம். சிவமோகன் தெரிவித்ததாவது:

இரணைமடுக் குளத்தின் கீழ் உள்ள கனகராயன் ஆற்றுப்படுக்கையில் மிக மோசமான முறையில் மண் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. குறித்த மண்ணகழ்வைத் தடுக்காதுவிடின் இரணைமடு குளத்துக்கு பெரும் ஆபத்துக் காணப்படுகின்றது. அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் மணல் அகழ்வைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் - என்றார். (ம-214,6)

# அதே 'சிம்'; அதே 'எண்' வலையமைப்பை மாற்றலாம்

## வாடிக்கையாளர்களுக்கு புதிய வசதிகள்

**கொழும்பு, ஓக.26**
**பாவனையாளர்கள் உபயோகிக்கும் தொலைபேசி இலக்கங்களை மாற்றா மலேயே, விரும்பிய தொலைபேசி வலைய மைப்பை மாற்றிக்கொள்ளும் புதிய நடைமுறை தொடர்பில் இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழு விவாதித்து வருகின்றது.**

இதனடிப்படையில், சிம் காா்ட்டை மாற்றாமலேயே, நுகர்வோர் தங்களுக்கு விருப்பமான வலையமைப்பைத் தேர்ந்தெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இதன்படி, அனைத்து வலையமைப்புகளுக்கான கட்டணத்தையும் சம அளவாகப் பேணுவது குறித்தும் விவாதிக்கப்பட்டு வருகிறது. கையடக்கத் தொலைபேசி, மற்றும் நிலையான தொலைபேசி இணைப்புக்கள் இரண்டிற்கும் இந்த வசதி ஏற்படுத்தப்படவுள்ளது.
இது தொடர்பாக வலையமைப்பு நிறுவனங்களுடன் கலந்துரையாடல் நடத்தப்படுகின்றது.
இந்தத் திட்டம் தொடர்பான அனைத்து விவரங்களும் அடுத்த வாரத்திற்குள் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்படும் என்று தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
இந்த வசதி பல வெளிநாடுகளில் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

## சிறைச்சாலைக்குள் போதைப்பொருள் பாவனையைக் கண்டறிய மதுசாரக் கீற்றுகள்

கொழும்பு, ஓக.26
சிறைக்கைதிகள் போதைப்பொருள்களைப் பயன்படுத்துவதைக் கண்டுபிடிக்கும் வகையில் மதுசாரக் கீற்றுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என சிறைத்துறை சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.
செய்தியாளர்களிடம் இது தொடர்பில் கருத்துரைத்த அவர், சிறைச்சாலைகளுக்குள் மதுப்பொருள்கள் கொண்டு வரப்படுகின்றமை ஏற்கனவே தடுக்கப்பட்டுள்ளது.
இந்தநிலையில் இடைக்கிடையே சிறைக்கைதிகள் மத்தியில் மதுசாரக் கீற்றுகளைக் கொண்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
இதன்போது மதுபானம் அல்லது போதைப்பொருள் பயன்படுத்தியமை கண்டறியப்பட்டால் அது எவ்வாறு சிறைச்சாலைக்குள் கொண்டு வரப்பட்டது என்பது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி2)




அமரர் பெரியதம்பி செல்வவிநாயகமூர்த்தி நினைவு தினத்தை முன்னிட்டு, அவரது குடும்பத்தினரின் நிதி உதவியில், முல்லைத்தீவு மாங்குளம் மகா வித்தியாலய மாணவர்களை கொவிட் 19 தொற்றிலிருந்து பாதுகாக்கும் நோக்கில் கைகழுவும் பொறித்தொகுதிகளும் தொற்றுநீக்கி திரவங்களும் வெளிச்சம் நிறுவனத்தின் ஊடாக நேற்று வழங்கப்பட்டன. (ரி3-222)

## புதிய சுற்றுலாத்தளங்கள் விரைவில் அபிவிருத்தி

கொழும்பு, ஓக.26
இலங்கையில் சுற்றுலாத் துறைக்காக இது வரையில் பயன்படுத்தப்படாத மற்றும் சுற்றுலா ஈர்ப்பைப் பெறக்கூடிய 2600 இடங்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றை விரைவில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
மேலும், கட்டுநாயக்க விமான நிலையத்தைத் திறந்து சுற்றுலாப் பயணிகளை மீண்டும் நாட்டிற்கு அழைத்து வரும் சந்தர்ப்பத்தில் இந்த 2600 இடங்களும் சுற்றுலாப் பயணிகளுக்காக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக ஒரே நேரத்தில் அதிக சுற்றுலா பயணிகளை அழைத்து வரக்கூடிய வகையில் அதன் அபிவிருத்தி நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படவுள்ளன. (ரி3)

## பழுதடைந்த 5000 கிலோ மீன்கள்: ஏற்றிச்சென்ற லொறி மடக்கிப்பிடிப்பு



புத்தளம், ஓக.26
பழுதடைந்த நிலையில் உள்ள சுமார் 5000 கிலோ கிராம் மீன்களை ஏற்றிச்சென்ற லொறி ஒன்றை புத்தளம் சுகாதார பரிசோதகர்கள் மடக்கிப் பிடித் துள்ளனர்.
நேற்றுமுன்தினம் மாலை கொழும்பிலிருந்து புத்தளம் நகரினூடாக அனுமதிப்பத்திரமின்றி இந்த மீன்கள் மன்னாருக்கு கொண்டு செல்லப்பட்டபோது குறித்த லொறி புத்தளம் பொதுச் சுகாதார ஊழியர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டது.
இந்த லொறி புத்தளம் நகரினூடாகச் சென்றபோது துர்நாற்றம் வீசியதன் காரணமாக லொறி மடக்கிப் பிடிக்கப்பட்டு சோதனைகளை முன்னெடுத்த வேளையில் மனித பாவனைக்கு உகந்ததல்லாத சுமார் 5000 கிலோகிராம் நிறையுடைய மீன்கள் காணப்பட்டன.
இம் மீன்கள் 3 நாள்களுக்கு முன்னரே பழுதடைந்திருக்கலாம் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர். (ரி3)

## இலங்கையுடன் உறவு; பலப்படுத்தும் இந்தியா

கொழும்பு, ஓக.26
இலங்கையுடன் மத மற்றும் கலாசார உறவுகளை விருத்தி செய்யவுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.
கண்டியில் கண்டிய நடனப்பீடம் ஒன்றை அமைப்பதற்கான வழிநடத்தல் குழுக்கூட்டம் கடந்த வார இறுதியில் நடைபெற்றபோதே இந்தியா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது. இந்தக் கூட்டமானது இந்தியாவுக்கான உதவி உயர்ஸ்தானிகர் வினோட் கே.ஜேக்கப் மற்றும் புத்தசாசன அமைச்சின் செயலாளர் கபில குணவர்த்தன ஆகியோரின் தலைமையில் இடம்பெற்றது.
இந்தப் பீடத்தை அமைப்பதற்காக 145 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டில் கட்டடம், தளபாடங்கள், பலநோக்கு மண்டபம் மற்றும் கருவிகள் என்பன இந்தியாவினால் வழங்கப்படவுள்ளன. இதேவேளை இந்தியா இலங்கையின் அபிவிருத்திக்கு உதவும் வகையில் இதுவரை 92 பில்லியன் ரூபா பெறுமதியான திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் இந்திய உயர்ஸ்தானிகரம் அறிவித்துள்ளது. (ரி2)

# 2100இல் இலங்கையின் சனத்தொகை பாதியாகும்

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஓக.26
80 ஆண்டுகளில் இலங்கையின் சனத்தொகை பாதியாகக் குறையும் என்று வெளியிடப்பட்ட ஆய்வு முடிவு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கருத்தரிப்பு விகிதங்கள் தொடர்பில் தி லான்செட் பத்திரிகை நடத்திய ஆய்வின் அடிப்படையில் இந்தக் கணிப்பு வெளிவந்துள்ளது.
உலகெங்கிலும் உள்ள 195 நாடுகளில் கருத்தரிப்பு வீதங்கள், இறப்பு விகிதம், இடம்பெயர்வு மற்றும் சாத்தியமான மக்கள் தொகை மாற்றம் ஆகியவற்றை இந்த ஆய்வு கருத்திற்கொண்டுள்ளது.
அந்த அறிக்கையின்படி, இலங்கையின் மக்கள் தொகை 2100க்குள் 10.45 மில்லியனாக குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
2017 ஆம் ஆண்டில் 21.60 மில்லியனாக இருந்த இலங்கையின் மக்கள் தொகை 2031 க்குள் அதன் அதிகபட்ச மக்கள் தொகையை எட்டும், இது 22.34 மில்லியனாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் இலங்கையில் கருவறுதல் விகிதம், ஒரு பெண்ணுக்குப் பிறந்த குழந்தைகளின் சராசரி எண்ணிக்கை 1.80 ஆகும். இருப்பினும், அடுத்த 80 ஆண்டுகளில் இது 1.46 ஆகக் குறையும் என்று அறிக்கை தெரிவித்துள்ளது. சுகாதார பரிந்துரைகளின்படி, ஒரு நாட்டின் சராசரி கருவுறுதல் வீதம் 2.1 க்கும் குறைவாக இருந்தால், அந் நாட்டின் மக்கள் தொகை குறையும். இலங்கையில் கருவுறுதல் விகிதம் 1963 இல் 5.0 ஆகவும், 2016 இல் இது 2.2 ஆகவும் குறைந்துள்ளது. (ரி1)



கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தியை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை சிறப்பு வழிபாடுகள் நடைபெற்று விநாயகப் பெருமான் வீதி வலம் வந்தார். (ஜ-17)



# இன்றைய நாள்

**மேடம்:** தம்பதியர் இடையே இருந்த பிரச்சினைகள் நீங்கும் நாள். பிள்ளைகளின் நன்மைக்காக சில செயல்களை மேற்கொள்வீர்கள். வீண் வாக்கு வாதத்தை தவிர்ப்பது நல்லது. பழைய பாக்கிகள் வசூலாகும்.

**இடபம்:** எடுத்த முயற்சிகள் தடைக்குப் பின் முடியும் நாள். மனதில் எதை பற்றியாவது சிந்தித்தவாறு இருப்பீர்கள். வியாபாரத்தில் சீரான போக்கு காணப்படும். வேலை தேடுவோருக்கு நற்செய்தி உண்டு.

**மிதுனம்:** எதிலும் சற்று தாமதம் ஏற்படும் நாள். தொழிலில் இருந்த பிரச்சினை விலகும். பணியாளர்களுக்கு நன்மை உண்டாகும். பொழுது போக்கின்மீது ஆர்வம் அதிகரிக்கும்.

**கடகம்:** தெய்வீக விஷயங்களில் ஈடுபடும் நாள். உடல்நிலையில் முன்னேற்றம் காணப்படும். திட்டங்களில் மாற்றம் உண்டு. பணியாளர்கள் புதிய பொறுப்புக்களை ஏற்பர். சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் தீரும்.

**சிம்மம்:** குடும்பத்தில் திடீர் விவாதங்கள் ஏற்படும் நாள். பணிகளில் கவனம் தேவை. மருத்துவ செலவுகள் ஏற்படலாம். வாகனங்களில் செல்லும்போது எச்சரிக்கையாக இருக்கவும்.

**கன்னி:** உத்தியோத்தர்கள் பணிகளில் கவனமாக இருக்கவும். தம்பதி இடையே வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. தர்மம் செய்யத் தோன்றும். கலைத்துறையினர் வாக்கு வன்மையால் புது ஒப்பந்தங்களைப் பெறுவர்.

**துலாம்:** நிம்மதியான நாள். தொழில் தொடர்பான விவகாரங்களில் நிதானப் போக்கு காணப்படும். பணியாளர்களுக்குப் போட்டிகள் விலகும். குடும்பத்தில் வாக்குவாதம் தீரும்.

**விருச்சிகம்:** பிள்ளைகளின் செயல்பாடுகள் மனதிற்கு திருப்தி தரும் நாள். உறவினர்களிடம் பக்குவமாக பேசுவது நல்லது. வழக்குகளில் மெத்தனப் போக்கு காணப்படும்.

**தனுசு:** அலைச்சல் உண்டாகும் நாள். மனதில் தேவையேயில்லாத கவலை தோன்றும். கலைத்துறையினருக்கு வாய்ப்பு வரும். சுதந்திர எண்ணம் உண்டாகும்.

**மகரம்:** திறமைகள் வெளிப்படும் நாள். சிறு விஷயங்களில் மனநிறைவு கிடைக்கும். வியாபாரம் தொடர்பான பயணம் தள்ளிப்போகும். கலைஞர்களின் முயற்சிகள் பலன் தரும்.

**கும்பம்:** சவாலான வேலைகளை முடிக்கும் நாள். பிள்ளைகள் பொறுப்புடன் செயல்படுவார்கள். நேற்றிருந்த களைப்பு நீங்கும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு உண்டு.

**மீனம்:** திடீர் யோகம் கிடைக்கும் நாள். பணப்புழக்கம் அதிகரிக்கும். நண்பர்களால் உற்சாகம் பொங்கும். அரசால் உதவி உண்டு. வழக்கு சாதகமாக முடிவதற்கான அடையாளம் தென்படும்.

# கொரோனா ஆபத்து நீங்கவில்லை

## இராணுவத் தளபதி எச்சரிக்கை

கொழும்பு, ஓக.25

கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் ஆபத்து நீங்கி விட்டது எனக் கருத வேண்டாம் என நாட்டு மக்களுக்கு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று சமூகப் பரவலாக மாறாத போதிலும் கொரோனா ஆபத்து நீங்கி விட்டது எனக் கருதக்கூடாது. ஆபத்து முற்றாக நீங்கிவிட்டது எனக் கருதி



மக்கள் கொரோனா வைரஸ் தொடர்பான தங்கள் முன்னெச்சரிக்கையைத் தளர்த்தக்கூடாது. இலங்கையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் நோயாளிகள் அனைவரும் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களே. வெளிநாட்டிலிருந்து அழைத்து வரப்படுபவர்களில் சிலர் கொரோனா வைரஸினால் பாதிக்கப்படும் நிலை காணப்படுகின்ற போதிலும், வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களைத் தொடர்ந்து அழைத்து வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த நிலையில், பொதுமக்கள் ஆபத்து நீங்கி விட்டது எனக் கருதாது எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ரி3)

# தபால் முத்திரைக்கான சித்திரப் போட்டி

யாழ்ப்பாணம், ஓக.26

இந்த ஆண்டுக்கான நத்தார் தின தபால் முத்திரைக்கான சித்திரப் போட்டியை மிக விரிவான ஏற்பாடுகளுடன் நடத்த கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பத்து வயதுக்கு உட்பட்டவர்கள், 11 15 வயதுக்கு இடைப்பட்டவர்கள், 16 21 வயதுக்கு இடைப்பட்டவர்கள் மற்றும் 21 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று நான்கு மட்டத்தில் இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிக்கான ஆக்கங்களை எதிர்வரும் ஒக்பரோபர் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும். இப்போட்டி தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற 0112665584 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-121)

# போதைப்பொருள் கடத்தல்: கில்லாடிப் பெண் கைது

கொழும்பு, ஓக.26

போதைப்பொருள் கடத்தல் மூலம் பணம் ஈட்டியமை தொடர்பில், திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் ஜனித் மது ஷங்க டி சில்வாவின் தாயார் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல்மாகாணம் வடக்குப் பிரிவில் கொட்டாவை மாயா மாவத்தைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிமிருந்து 51,000 ரூபா பணம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், 5 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் வங்கிக் கணக்குப் புத்தகம் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளது எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ரி2)

# உத்தியோகத்தர்களுக்கு தீயணைப்புப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஓக.26

பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான அடிப்படை தீயணைப்புப் பயிற்சி யாழ்ப்பாண பிர தேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.



உதவிப் பிரதேச செயலர் திருமதி. ஆர்.சோபிகா தலைமையில் இடம் பெற்ற இப் பயிற்சி நெறியின் வளவாளர்களாக யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு உத்தியோகத்தர் ஆர். விஜிந்தன் மற்றும் மாவட்டச் செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவு உத்தியோகத்தர் எல்.ஏ.பிரேம்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். இப் பயிற்சி நெறியில் தீய ணைப்பு ஏற்படும் சந்தர்ப்பங்கள், அதற்கான தடுப்பு முறைகள் என்பன பற்றிய விளக்கங்களுடன் கூடிய செயன்முறையும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டன. (ரி1)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு விருத்திக்கு திட்டம் வகுப்பு

கொழும்பு, ஓக.26

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டுக்காக 5 வருட காலத் திட்டமொன்றை வகுக்கவுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தை தயாரித்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு சந்தைப் பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றினால் தற்காலிக பின்னடைவைச் சந்தித்துள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறையை அடுத்த வருட ஆரம்பத்துக்குள் மீளக் கட்டியெழுப்ப எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். மேலும் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த பங்களிப்பு வழங்கும் நிறுவனமாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தை மாற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ரி2)

# மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை வியாழன் காலை 8 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரை **யாழ்.மாவட்டத்தில்** பருத்தித்துறை 3ம் குறுக்குத் தெரு, சிவப்பிரகாசம், தும்பளை, வெளிச்சவீடு, நெல்லண்டை, மாதனை, கற்கோவளம், கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை, புனித நகர் ஆகிய இடங்களிலும், வவுனியா மாவட்டத்தில் மகாகச்சக்கொடிய கிராமம், ஆண்டியப்புளியங்குளம் , கற்கந்தகுளம், பூவரசங்குளம் எத்திலிருந்து வாரிக் குட்டியூர் வரை, தவசிக்குளம் பிரதேசம் ஆகிய இடங்களிலும், காலை 8 மணியிலிருந்து மதியம் 12 மணிவரை கிளிநொச்சி மாவட்டத்தில் மாசார், சோரன்பற்று ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார்.

## பண்டாரவன்னியனின் வெற்றி நாள் நினைவு கடைப்பிடிப்பு



வவுனியா, ஓக. 26

வன்னி இராச்சியத்தின் இறுதி மன்னன் பண்டாரவன்னியனின் 217ஆவது நினைவு நாள் நிகழ்வு வவுனியாவில் நேற்று நினைவுகூரப் பட்டது.

வவுனியா நகரசபை மற்றும் விழாக்குழுவின் ஏற்பாட்டில் நகரசபை தலைவர் இ.கௌதமன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

வவுனியா மாவட்டச் செயலக முன்றிலில் அமைந்துள்ள பண்டாரவன்னிய மன்னனின் சிலைக்கு நேற்றுக் காலை 8.15 மணியளவில், ஜனாதிபதி சட்டத்தரணி மு.சிற்றம்பலம் மலர் மாலை அணித்து அஞ்சலி செலுத்தினார். நகர சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். தமிழருவி சிவகுமாரனால் நினைவுப் பேருரையும் நிகழ்த்தப்பட்டது.

தொடர்ந்து வவுனியா நகர சபை மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன. வரலாற்றுரையை ஊடகவியலாளர் அருணா செல்லத்துரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணியும் வவுனியா மாவட்ட முன்னாள் சபைத் தலைவருமான மு.சிற்றம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், மாவட்டச் செயலர் சமன்பந்துலசேன, மேலதிக மாவட்டச் செயலர் செ.திரேஸ்குமார், வவுனியா வளாக முதல்வர் ரி.மங்களேஸ்வரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (ஓ,5,110)

★★★★★

முல்லைத்தீவு, ஓக. 26

முல்லைத்தீவு கோட்டையை மாவீரன் பண்டார வன்னியன் வெற்றிகொண்ட 217 ஆம் ஆண்டு வெற்றி நாள் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் அமைந்துள்ள பண்டாரவன்னியனின் உருவச் சிலைக்கு வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரனால் மலர்மாலை அணிவித்து, மலர்தூவி நினைவு கூரப்பட்டது.

நிகழ்வில் கரைதுரைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான சின்னராசா லோகேஸ்வரன், மரியநாயகம் தொம்மைப்பிள்ளை, ஓய்வுபெற்ற கிராம அலுவலர் ப.தெய்வேந்திரம், சமூக ஆர்வலர் ப.சுபாகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-246)



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஐக்கியஇராட்சிய பழைய மாணவர் சங்கத்தின் திடல் செயல்திட்டத்தின் இரண்டாம் பாகமாக மைதானத்தில் 12 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் நிறுவப்படவிருக்கும் விளையாட்டு வீரர்களின் கழகமனை கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்ற போது. (ஐ)

நுரைச்சோலை

# மின் பிறப்பாக்கியின் உற்பத்தி ஆரம்பம்

**கொழும்பு, ஓக.26**

**நுரைச்சோலை லக்விஜய மின் நிலையத்தின், இரண்டாவது மின் பிறப்பாக்கி இயந்திரம் நேற்று முதல் மின் உற்பத்தியை ஆரம்பித்துள்ளது என மின் நிலையத்தின் முகாமையாளர் இந்திரஸ்ரீ கால்லகே தெரிவித்துள்ளார்.**

இதன் மூலம் 60 மெகாவாட் மின்சாரம் தேசிய மின்சாரக் கட்டமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது. ஏனைய மின் பிறப்பாக்கி இயந்திரங்களையும் துரிதமாகச் செயற்படுத்த பொறியியலாளர்கள் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

இதேவேளை, நாடு முழுவதும் இடம்பெற்ற மின்சாரத் துண்டிப்பு பற்றி ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட குழுவின் இடைக்கால அறிக்கை அமைச்சர் டலஸ் அழகப்பெருமவிடம் கையளிக்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

## கால போக பயிர்ச் செய்கை கூட்டங்கள்

பூநகரி, ஓக.26

பூநகரி கமநல சேவை நிலையப் பிரிவுக்குட்பட்டகமக்கார அமைப்புக்களுக்கான 2020/2021 கால போகப் பயிர்ச் செய்கை கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இதன்படி நாளை வியாழக் கிழமை காலை 9 மணிக்கு ஆலங்கேணி கமக்கார அமைப்புக்கும், 10.30 மணிக்கு பரமக்கிராய் கமக்கார அமைப்புக்கும் நடைபெறவுள்ளன. 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு செட்டியகுறிஞ்சி கமக்கார அமைப்புக்கும் ,10.30 மணிக்கு கறுக்கால் தீவு கமக்கார அமைப்புக்கும் நடைபெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல விவசாயிகளும். தவறாது கலந்துகொண்டு மானியப் பசளை பட்டியல் பதிவு, வயற்காணிகளை அடையாளப்படுத்தல், சந்தா செலுத்துதல், ஏக்கர் வரி செலுத்துதல், விவசாய அடையாள அட்டைப் பதிவுகள், குத்தகைப் பதிவுகள் போன்ற சகல செயற்பாடுகளையும் பூர்த்தி செய்து கால போகப் பயிர்ச் செய்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)



யாழ்ப்பாணம், ஓக.26

பண்டார வன்னியனின் வெற்றிநாள் நினைவுதினம் நேற்று யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் உள்ள அவரின் உருவச்சிலையடியில் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் உருவச்சிலைக்கு முன்பாக மன்னனின் உருவப்படம் வைக்கப்பட்டு, மாலை அணிவித்தும், மலர்கள் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ரி1-20)

★★★★★

பளைப் பிரதேசத்தின்

# முன்பள்ளிகள் இன்று திறப்பு

பளை,ஓக. 26

சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக பளைப் பிரதேசத்துக்கு உட்பட்ட முன்பள்ளிகள் அனைத்தும் இன்று மீண்டும் திறக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் நடைபெற்ற பிரதேச சுகாதார குழுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளின் பிரகாரம் சுகாதார விதிமுறைகளுக்கேற்ட சிறார்கள் கைகழுவும் வசதிகள், சிறார்களிடையே இடைவெளி பேணக்கூடிய வகையிலான வசதிகளைச் கொண்டதாக உள்ளது என பிரதேச பொது சுகாதார பரிசோதகரால் அறிக்கை வழங்கப்பட்டு முன்பள்ளிகளைத் திறப்பதென முடிவு செய்யப்பட்டது. கொரோனா தொற்றுக் காரணமாக கடந்த மார்ச் மாதம் மூடப்பட்ட முன்பள்ளிகள் சிறார்களின் அடிப்படைக் கல்வி வசதிகளைக் கருத்தில் கொண்டு திறக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ 9)





## கூரிய ஆயுதத்தால் தாக்கி பெண் ஒருவர் கொலை

கொழும்பு, ஓக.26

கூரிய ஆயுதத்தால் தாக்கி பெண் ஒருவர் பேரகஸ் ஹந்தியமல்வத்த பகுதியில் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பெண் வீட்டிலிருந்த போதே இடம் பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்த பெண் 39 வயதுடையவர் என்பதோடு, 11 வயது சிறுமி ஒருவரின் தாயாருமாவர். (ரி2)

# 38 கடைகளுக்கு சீல்! வியாபாரிகள் போராட்டம்

**கிளிநொச்சி, ஓக. 26**
**கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட சேவைச் சந்தையில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு பின்னர் 38 மரக்கறிக் கடைகளுக்கு கரைச்சி பிரதேச சபையால் சீல் வைக்கப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேச சபையின் செயலரின் ஒப்பத்துடன் 38 வியாபார நிலையங்களுக்கு முன்பாகவும் கடைகள் பூட்டப்பட்டுள்ள அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ளது.**



இது தொடர்பில் தெரியவருவதாவது; கிளிநொச்சி சந்தையில் உள்ள மரக் கறி வியாபாரிகள் 48 பேருக்கும் கூட் டம் ஒன்று திங்கள் பிற்பகல் மூன்று மணிக்கு கரைச்சி பிரதேச சபையின் தவிசாளரால் ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது என்று அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு வாய்மொழி மூலம் சந்தைக் காப்பாளர் ஊடாக அறிவிக் கப்பட்டுள்ளது.

திடீரென அறிவிக்கப்பட்டதால் கூட்டத் துக்கு 38 வியாபாரிகள் செல்ல வில்லை. தவிசாளர், சேவை சந்தையின் வர்த்தக சங்கத்தின் தலைவர் முன்னிலையில் சபையின் செயலருக்கு வழங்கிய பணிப்புரைக்கு அமைவாக 38 வியாபார நிலையங்களுக்கு முன்பாகவும் சந்தை பூட்டப்பட்ட பின்னர் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் தங்களது வியாபார நிலையம் 25ஆம் திகதி முதல் மூடப்படுகிறது என்று அறிவித்தல் ஒட் டப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை சந்தைக்குச் சென்ற வியாபாரிகள் இந்த அறிவித்தலைப் பார்த்து அதிர்ச்சியடைந்தனர். மங்கல நிகழ் வுகள் இருந்தமையால் நாம் வியாபார நிலையங்களில் உதவியாளர்களை விட்டுவிட்டுச் சென்றுவிட்டோம். அத் தோடு பல வியாபாரிகளுக்கு தகவல் சென்றடையவில்லை. சாதாரண கூட்டத்துக்கு ஏழு நாள்களுக்கு முன் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். ஆனால் இதில் எந்த நடைமு றையையும் பின்பற்றாது காலை 11 மணிக்கு, வாய் மொழி மூலம் பிற்பகல் 3 மணி கூட்டத்துக்கு வருமாறு அழைப்பு விடுத்துவிட்டு கூட்டத்துக்கு சமுகமளிக்காதவர்களின் வியா பார நிலையங்களைப் பூட்டுவது அநியாயமான செயல் என்று தெரிவித்தவர். சந்தை வியாபாரிகள் நேற்றுப் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது அங்கு சமுகமளித்த கரைச்சி பிரதேச சபை யின் செயலர், இது தமது தவறான நடவடிக்கை என்றும் வியாபாரிகள் மீண்டும் வியாபார நிலையத்தை திறந்து நட வடிக்கைளை மேற்கொள்ள முடியும் என்று தெரிவித் தார். இந்த நடவடிக்கை யால் ஏற்பட்ட பாதிப்புக்கு வருத்தம் தெரிவித்த பிர தேச சபை செயலர், வர்த்த கர்கள் பாதிக்கப்பட்டிருப் பின் எழுத்து மூலமாக முறையிடுமாறும் கேட்டுக் கொண்டார்.

அந்தப் பகுதிக்கு வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ச.பிரபாகரன் வியாபா ரிகளை சந்தித்துக் கலந்துரையாடியதுடன் வியாபார நிலை யங்களைத் திறந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார். கரைச்சி பிரதேச சபை செயலர் மற்றும் கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோ ரின் வாக்குறுதிக்கமைவாக வியாபாரிகள் மேற்கொண்டி ருந்த போராட்டம் கைவிடப்பட்டது.

காலை 9.30 மணிக்கே மரக்கறி சந்தை திறக்கப்பட்டது. இதனால் வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் கரைச்சிப் பிரதேச சபையின் தவி சாளர் வேழமாலிகிதனிடம் கேட்டபோது, சந்தை வியாபாரிகள் நடைபாதையை உள்ளடக்கி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். மக்கள் பாதிக்கப்படுகின்றனர். நடைபாதை யில் பொருள்களை வைத்து விற்பனை செய்வதால், நடை பாதையை பயன்படுத்துகின்றவர்கள் பாதிக்கப்படுகின்றனர். தம்புள்ளையில் இருந்து மரக்கறிகளை மொத்தமாக இறக்கி விற்பனை செய்வதாக முறைப்பாடு கிடைத்தது. இந்த விட யங்கள் தொடர்பில் ஆராய்வதற்கே வியாபாரிகள் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டனர். கூட்டத்துக்கு வராதவர் களை சபைக்கு வந்து அறிவுறுத்தல்களைப் பெற்று கடைக ளைத் திறக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது- என்றார்.

(ஓ.-5,6,214)

## ஓ.எல். மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 26

இந்த வருடம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எழுதும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான இலவச கருத்த ரங்கு நடைபெறவுள்ளது.

கொழும்பு அருள் கல்வி வட்டத்தினரின் ஏற் பாட்டில் கணிதம், விஞ்ஞானம், தமிழ் மற்றும் வரலாறு ஆகிய பாடங்களுக்கான கருத்த ரங்கு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரையும், 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண் டபத்தில் (பெண்கள் மட்டும்) காலை 7.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை யும், 31 ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் (ஆண்கள் மட்டும்) காலை 7.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரையும், முதலாம் திகதி யாழ்ப்பாணம் வீர சிங்கம் மண்டபத்தில் (இருபாலாரும்) காலை 7.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரையும் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

கடந்த 5 வருட வினா விடைக்கொத்து மற்றும் நூல்கள் என்பன இலவசமாக வழங்கப்பட வுள்ளன.

மாணவர்கள் தங்களுக்குத் தேவையான குடிதண்ணீர் மற்றும் முகக்கவசம் அணிந்து பாடசாலை சீருடையுடன் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி வே.தேவசேனாதிபதியின் அனு சரணையில் இக் கருத்தரங்கு நடைபெறவுள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## பொங்கல் விழா

நெடுங்கேணி, ஓக.26

நெடுங்கேணி அருள்மிகு சடவன்குளம் சின் னடம்பன் ஆதி ஐயனார் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பொங்கல் விழாவுக்கான கிரியைகள் கடந்த 21 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வரு கின்றன.

29 ஆம் திகதி காலை 9 மணிக்கு நேர் திக்கடன் செய்தல் ஆரம்பமாகும். காலை 10 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி நடை பெற்று இரவு 10 மணிக்கு பண்டமெடுக்கும் நிகழ்வு நடைபெறும். 30 ஆம் திகதி அதி காலை பொங்கல் நிகழ்வு நிறைவுபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## போதையில் சாரத்தியம் ரூபா 2,50,000 தண்டம்

சாவகச்சேரி, ஓக. 26

போக்குவரத்து விதிமுறைகளை மீறி மதுபோ தையில் வாகனம் செலுத்திய 7 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப் பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டன.

சாரதிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டமையை அடுத்து மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய மூவ ருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதமும், மது போதையில் வாகனம் செலுத்திய நால்வ ருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும் தண் டம் விதிக்கப்பட்டது.

(ஐ-9)

## சேவை நலன் பாராட்டு நிகழ்வு



யாழ்ப்பாணம், ஓக.26


யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சபையின் முன்னாள் செயலாளர் திருமதி வேதவல்லி செல்வரத்தி னத்துக்கான சேவை நலன் பாராட்டு நிகழ்வு வீரசிங்கம் மண் டபத்தில் நேற்று நடைபெற்றது.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக கூட்டுறவுத் துறைக்கு பெரும் சேவையாற்றி இளைப் பாறிச் சென்ற சபையின் செயலா ளர் வேதவல்லி செல்வரத்தினத் துக்கு கூட்டுறவு அமைப்புக்கள் பலவும் வாழ்த்துரைகள் வழங் கின.

நிகழ்வில் வடக்கு மாகாண கூட்டு றவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன், மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையா ளர் திருமதி சியாமளா சண்முக லிங்கம், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமன், பேராசிரியர் க.தேவராஜா, மாவட் டக் கூட்டுறவு சபையின் உப தலைவர் க.மகாதேவன் உட்பட கூட்டுறவு சங்கத்தின் தலைவர்கள் வாழ்த் துரை வழங்கினர். (ஐ-17)

## கோடாவுடன் ஒருவர் கைது

புன்னாலைக்கட்டுவன், ஓக.26



கசிப்பு உற்பத்திக்கு பயன்ப டுத்தும் கோடா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து நேற்று முன்தினம் இரவு காங்கே சன்துறை பொலிஸ் பிராந் திய சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சகர் தலைமையின் கீழ் இயங்கும் பொலிஸ் குழு வால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரின் வீட்டில் இருந்து 95 லீற்றர் கோடா கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டது.

மேலதிக சட்ட நடவடிக்கைக்காக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் பாரப்ப டுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-25)

# அபே ஜனபல கட்சியின் விவகாரம் நீதிமன்றுக்கு?

கொழும்பு,ஓக.26

அபே ஜனபல கட்சியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பான பிரச்சினை, நீதிமன்றம் ஊடாக தீர்ப்பதற்குத் தேவை ஏற்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் 3 உறுப்பினர்களும் இது தொடர்பில் மாறுபட்ட நிலைப்பாடுகளில் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அபே ஜனபல கட்சிக்கு ஒரு தேசியபட்டியல்ஆசனம்கிடைத்திருந்தது. அந்த ஆசனம் தொடர்பில் நெருக்கடி ஏற்பட்டதுடன், கட்சியின் பொதுச்செயலாளர் வேதினிகம விமலதிஸ்ஸ தேரர் தற்போது காணாமற் போயுள்ளார்.

எனினும் அவர் காணாமற்போயுள்ள விடயம் தொடர்பில் அத்துரலியே ரத்ன தேரர் மீது சிலர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கட்சியின் பிரதிநிதிகள் சிலர் தேர்தல் ஆணைக்குழுவில் பிரசன்னமாகியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைந்த 13 பேர் கைது

கொழும்பு,ஓக.26

கோட்டை அதியுயர் பாதுகாப்பு வலய கடற்பகுதிக்குள் அனுமதியின்றிச்சென்ற வெளிநாட்டவர் உட்பட 13 பேர் கடற்படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இரண்டு படகுகளில் பயணித்துக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டனர் என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் எச்சரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

புகைப்படம் எடுப்பதற்காக இவர்கள் கடலுக்குள் சென்றுள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (க)

# சர்வாதிகாரப் போக்குக்கு மீண்டும் திரும்பும் நாடு

## எச்சரிக்கை விடுக்கின்றார் சம்பிக்க

கொழும்பு, ஓக.26

தற்போதைய அரசால் 19 ஆவது திருத்தம் நீக்கப்பட்டு, புதிய அரசமைப்பு அறிமுகப் படுத்தப்படுகின்றமை தொடர்பில் பேசப்படுவதானது, நாடு சர்வாதிகாரப் போக்கிலான வரலாற்றுக்கு மீண்டும் திரும்பிக் கொண்டிருப்பதற்கான அறிகுறியா? என்று கருத வேண்டியுள்ளது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது;

நாட்டைப் பொறுத்தவரையில் அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் ஒரு சாபக்கேடாக இருக்கின்றது. நாட்டின் மிக முக்கிய அடிப்படைகளாக இருக்கின்ற பொருளாதாரம், பாதுகாப்பு, ஜனநாயகம் ஆகிய மூன்றையும் இது வலுவிழக்கச் செய்திருக்கிறது என்றும் கூறியிருக்கும் ஆளுந்தரப்பு, இவ்வருட இறுதிக்குள் அந்தத் திருத்தத்தை நீக்கி புதிய அரசமைப்பைக் கொண்டு வரவிருப்பதாகவும் அறிவித்திருக்கிறது.

ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரக் குறைப்பு, சுயாதீன ஆணைக்குழுக்களின் உருவாக்கம், அரசமைப்புப் பேரவையின் அறிமுகம், தகவல் அறியும் உரிமைச் சட்டம் உள்ளடங்கலாக பல்வேறு ஜனநாயக மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்த 19 ஆவது திருத்தம் நீக்கப்படுவதற்கு எதிராகப் பல்வேறு தரப்பினரும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

தற்போது ஆட்சிபீடமேறியிருக்கும் அரசு, இதற்கு முன்னர் 2013 ஆம் ஆண்டில் அதன் ஆட்சிக்காலத்தின் போது அரசமைப்பில் முற்போக்கான திருத்தங்களை ஏற்படுத்துவதாக நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளித்தும். எனினும் சர்வாதிகார முறையொன்றை நோக்கிச் செல்வதற்கு ஏதுவான அரசமைப்பின் 18 'ஏ' திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு முன்னதான அரசமைப்பின் 17 'ஏ' திருத்தத்தை நீக்கினார்கள்.

இந்தநிலையில் தற்போதும் அதே அரசின் பிரதிநிதிகள் அரசமைப்பின் 19'ஏ' திருத்தத்தை நீக்கி, அதன் பின்னர் புதிய அரசமைப்பொன்றைக் கொண்டு வருவது பற்றிப் பேசுகின்றார்கள். அவ்வாறெனின் வரலாறு மீண்டும் திரும்புகின்றதா?. என்றுள்ளது. (க)

# கலைஞர்களுக்கு 10 ஆயிரம் ரூபா



கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையில் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் உதவி அவசியமான 8 கலைஞர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. பிரதேச அபிவிருத்தி அலுவலரால் பயனாளிகளது வீடுகளுக்கு நேற்று நேரடியாகச் சென்று வழங்கப் பட்டது. (ஐ)

## கட்டடம்...

ஒருவர் கட்டடம் இடிந்து விழுந்ததில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.

நவாலி, கலையரசி ஒழுங்கையைச் சேர்ந்த அல்ரர் போல் (வயது 42) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கூரைத் தளத்தை உடைக்க முற்பட்ட போது, சீமெந்திலான கூரை இடிந்து விழுந்ததில் அவர் உயிரிழந்துள் ளார். அவரது சடலம் தெல் லிப்பழை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ26,20)

## முடிவெடுக்க...

நேற்றைய மத்திய செயற்குழுக் கூட்டம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுப் பிற்பகல் சிறிகொத்தாவில் நடைபெற்றது.

இதன்போது, கட்சியின் தலைமைத்துவம் மற்றும் தேசியப் பட்டியல் உறுப்பினர் தொடர்பாக கலந்துரையாடப்பட்ட போதும் கட்சியில் இவை குறித்து எவ்வித இறுதித் தீர்மானங்களும் எட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், எதிர்வரும் செப்ரெம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கட்சியின் தலைமைத்துவம் மற்றும் தேசியப் பட்டியல் உறுப்பினர் தொடர்பாக இறுதித் தீர்மானங்கள் எடுக்கப்படும் என்று அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. (எ22)


# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்

**மாணிக்கம் கிருபகாந்தன்**

(ஊழியர்
பிரதம தபாலகம்,
யாழ்ப்பாணம்)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.



தோற்றம் 20.05.1973 — மறைவு 25.08.2020

**2000 ஆம் ஆண்டு அஞ்சல் அணி தபாலகம், யாழ்ப்பாணம்.**

# 25 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 18 . 07 . 1907

மறைவு 02 . 09 . 1995

அமரர்

**ஆறுமுகம் கந்தையா**

(ஓய்வுநிலை தபால் அதிபர் - கோப்பாய்)

திதி: ஆவணி மாத பூர்வபட்ஷ அட்டமி

(26.08.2020) புதன்கிழமை

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து நாங்கள் சிறப்புடன் வாழ வழிகாட்டி எம்மை எல்லாம் விட்டு இருபத்தி ஐந்து ஆண்டுகள் கடந்தாலும் எங்களின் இதயங்களில் உங்கள் நினைவுகளைச் சுமந்து உங்கள் ஆத்மாசாந்தியடைய இறைவனை வணங்குகின்றோம்.


**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!**

கைதடிதெற்கு, கைதடி.
க.குலராசன் (மகன்)
ஏழாலைதெற்கு,
சுன்னாகம்.

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 02 . 2005



மறைவு 25 . 08 . 2020

**செல்வி திவ்வியா சரவணபவன்**

(யாழ் இணுவில் மத்திய கல்லூரி தரம்-10 மாணவி)

உடுவில் கிழக்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி திவ்வியா சரவணபவன் நேற்று (25.08.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சரவணபவன் (ஆசிரியர்-யாழ் வீமன்காமம் மகாவித்தியாலயம்), சாந்தினி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், கணேசவேல் (யாழ். இந்துக்கல்லூரி) பிரசாந்தி (இணுவில் மத்திய கல்லூரி), அமிர்தவர்ஷினி (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான முருகையா, பூபதி மற்றும் குணரத்தினம், சத்தியேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2020) புதன்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

# அரசமைப்புக்கு ஆதரவு தருக!!

### ஆளும், எதிரணி எம்.பிக்களுக்கு பிரதமர் மஹிந்த அறைகூவல்

கொழும்பு, ஓக. 26

**'நாட்டுக்குத் தேவையான புதியதொரு அரசமைப்பை உருவாக்குவதற்கே மக்கள் ஆணை வழங்கியுள்ளனர். எனவே, மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக, தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரலை ஒதுக்கிவைத்து விட்டு கட்சிபேதமின்றி அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்' என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச அறைகூவல் விடுத்துள்ளார்.**

9ஆவது நாடாளுமன்றத்துக்கு புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கான செயலமர்வு நேற்று முன்தினம் நாடாளுமன்றக் குழு அறையில் நடைபெற்றது. நாளையும் செயலமர்வு இடம்பெறவுள்ளது. ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'பிளவுபட்டிருந்த நாட்டை ஐக்கியப்படுத்துமாறு 2005ஆம் ஆண்டு நாட்டு மக்கள் ஆணை வழங்கியிருந்தனர். அதனை ஏற்று நாட்டை ஐக்கியப்படுத்தினோம். அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்கினார்கள். அன்றுபோல இம்முறை மற்றுமொரு பெரும் பொறுப்பை மக்கள் பிரதிநிதிகளாகிய எம்மிடம் ஒப்படைத்துள்ளனர். நாட்டில் தற்போதுள்ள அரசியலமைப்பில் மாற்றம் வேண்டும். நாட்டுக்கு தேவையான விதத்தில் புதியதொரு அரசமைப்பு அவசியம் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றும் பொறுப்பை நாம் ஏற்கவேண்டும். 1977ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசமைப்பே தற்போது நடைமுறையில் உள்ளது.

காலத்துக்கேற்ற வகையில் அது மாற்றப்படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது. அரசமைப்பு என்பது ஒருதரப்புக்குச் சொந்தமானது அல்ல. அது அனைவருக்கும் பொதுவானது. அரசமைப்பிலுள்ள ஒவ்வொரு சரத்துகளும் எமது வாழ்க்கையில் தாக்கம் செலுத்தக்கூடியவை. எனவேதான் மக்கள் கோரும் அரசமைப்பை இயற்றுவதற்காக கட்சி பேதங்களை மறந்து செயற்பட வேண்டியது எமது பொறுப்பாக உள்ளது' என்றார். (ம-44)

# யாழ். - கொழும்பு குளிரூட்டி ரயில் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 26

யாழ்ப்பாணம் - கொழும்பு இடையிலான குளிரூட்டிய ரயில் சேவையை மீள ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ள து. இதன்படி எதிர்வரும் 29ஆம், 30ஆம், 31ஆம் மற்றும் முதலாம் திகதிகளில் பரீட்சார்த்தமாக இந்த ரயில் சேவையில் ஈடுபடவுள்ளது.

இதில் பயணிப்போர் ஆசனங்களை முன்பதிவு செய்துகொள்ள முடியும் என ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த ரயில் கல்கிசையில் இருந்து அதிகாலை 5.10 மணிக்கும் காங்கேசன்துறையில் இருந்து மதியம் 1.15 மணிக்கும் சேவையில் ஈடுபடும் என்பது குறிப்பிடத் க்கது. (ம)



வடக்குப் பாதையில்

# தடம்புரண்டது ரயில் சேவைகள் பாதிப்பு!!

கொழும்பு, ஓக. 26

வடக்கு ரயில் மார்க்கத்தில் ரயில் ஒன்று தடம்புரண்டமையினால் போக்குவரத்து சேவைகள் நேற்று பாதிக்கப்பட்டிருந்தன. நேற்று காலை கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி புறப்பட்டுச் சென்ற ரயில் ஒன்று தடம் புரண்டதை அடுத்தே இவ்வாறு சேவைகள் பாதிக்கப்பட்டன. கோட்டை மற்றும் மருதா னைக்கு இடையிலேயே ரயில் தடம்புரண்டிருந்தது. (ம)

# கப்பல் தயாரிப்பு பணிகள் ஆரம்பம்



கொழும்பு, ஓக.26

கொழும்பு டொக் யாட் நிறுவனம் நோர்வேயிலுள்ள மிஸ்ஜ் இகோ பல்க் அஸ் நிறுவனத்துக்காக ஆறு பொருள்கள் போக்குவரத்து கப்பல்கள் உட்பட 10 கப்பல்களைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தச் செயற்றிட்டத்திற்கான உடன்படிக்கை கடந்த மார்ச் மாதம் 14ம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் குறிப்பிட்ட உரிமை நிறுவனத்தின் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் இச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மிஸ்ஜ் இகோ பல்க் அஸ் நிறுவனம் கரே மஸ் அன்ட் கம்பனி நிறுவனத்தின் உப நிறுவனமாகும் என்பதுடன் அதன் தாய் நிறுவனம் பல்வேறு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் பலவற்றின் பங்கு நிறுவனமாகும்.

கொழும்பு டொக்கியாட் நிறுவனம் மூலம். தயாரிக்கப்படவுள்ள இக் கப்பல்களில், போக்குவரத்துக் கப்பல் 89.5 மீற்றர் நீளத்தையும் 5000 தொன் பொருட்களைக் கொண்டுசெல்லக்கூடிய வகையிலும் தயாரிக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. அதற்கிணங்க கொழும்பு டொக்யாட் நிறுவனம் 18 மாத காலத்திற்குள் முதலாவது கப்பலை தயாரித்து வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளது.

ஏனைய கப்பல்களை எதிர்வரும் நான்கு வருடங்களுக்குள் தயாரிக்கவும் திட்டமிடப்ப ட்டுள்ளது. (ரி)

# ஆயுதங்களுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஓக. 26

ரத்கம பகுதியில் ஹெரோய்ன் போதைப் பொருள் மற்றும் துப்பாக்கிகளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ரத்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தேகொட பகுதியில் நேற்று குற்றப் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இதன்போது 6 கிலோகிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் , ரி 56 துப்பாக்கிகள் இரண்டும் , அதன் 82 தோட்டாக்களும் , 9 மில்லி மீற்றர் துப்பாக்கிகள் இரண்டும் , அதன் 39 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (த)

**வேலையாட்கள் தேவை**
கடையில் வேலை செய்யக்கூடிய படித்த அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.
தொடர்பு - 0761966600

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
Honda CD 90 Benly மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
0778989691

**வீடு வாடகைக்கு**
கந்தர் மடம். யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கருகில் 2 அறை. 2 குளியலறை. களஞ்சிய அறை. கராஜ் வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு.
075 281 9020

**தேவை**
ஊர்ச்சேவல், ஊர்ப்பேடு, விறாத்துக்குஞ்சு, வான்கோழி, கல்பேட் என்பன கொள்வனவு செய்யப்படும்.
தாசன் பாம்
158/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
077 312 7498

**வேலையாள் தேவை**
கொடிகாமத்தில் இயங்கும் ஹோட்டலுக்கு றொட்டி மேக்கர் தேவை.
077 948 4887

**சேவைநலன் பாராட்டு**




எமது வித்தியாலய கணிதபாட ஆசிரியை
திருமதி
**உதயகுமாரி பாலசுந்தரம்** அவர்கள்
(SLTS - I, Maths Trd)
32 வருட சேவையினையாற்றி
சுயவிருப்பின்பேரில் 31.03.2020 அன்று
ஓய்வுபெற்றிருக்கும் வேளை அவரின் மகத்தான சேவைதனை
*உளமாரப்பாராட்டி வாழ்த்துகின்றோம்*

சேவை விபரம்:
- யா/ மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் - 1988.09.21 - 1991.02.04
- யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை - 1991.02.05 - 1992.12.31
- யா/ மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் - 1993.01.01 - 1996.04.29
- மு/ துணுக்காய் அ.த.க.பாடசாலை (தற்காலிக இணைப்பு) - 1996.04.30 - 1997.07.27
- யா/ மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம் - 1997.07.28 - 1998.02.15
- யா/ மட்டுவில் கமலாசினி வித்தியாலயம் - 1998.02.16 - 2000.07.04
- யா/ சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம் (தற்காலிக இணைப்பு) - 2000.07.05 - 2002.04.28
- யா/ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் - 2002.04.29 - 2015.02.01
- யா/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம் - 2015.02.02 - 2020.03.31

பாடசாலைச் சமூகம்
யா/ மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்.

**IELTS 6.5 புள்ளிகட்கு மேல் பெற வேண்டுமா**



- 4 வார இறுதிகள் (8 முழுநேர வகுப்புகள் 60 மணித்தியாலங்கள்) பரீட்சைக்கு முன் மேலதிக பயிற்சி செய்தல் போதுமானது
- கொழும்பு / கண்டியிலிருந்து வருகை தரும் அனுபவ பயிற்சியாளர்களால் யாழ்ப்பாணத்தில் பயிற்றப்பட்டு தரமுயர்த்தப்படுவீர்கள்

ஆரம்பம்: 05 செப்ரெம்பர் 2020
- ஒரு வகுப்பில் 20 பேர் மட்டுமே
- முன் பதிவு அவசியம்.

உலகின் அனைத்து நாடுகளின் பல்கலைக்கழக அனுமதியுடன் STUDENT VISA பெற

Ae Aspirations Education
ASPIRATIONS EDUCATION
204, SIR PON RAMANATHAN ROAD, JAFFNA.
021 221 5232 / 077 477 5343 / 076 824 5385

# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from the qualified persons for the under mentioned posts.

### FACULTY OF TECHNOLOGY

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Unconfirmed) /Lecturer (Probationary) in ***Engineering Technology/ **Bio Systems Technology/***Inter Disciplinary Studies**

**Note 01:**

* For positions in **Engineering Technology** special consideration will be given to those who have degrees in Technology or Engineering specialized in one or more of the following fields;
- Building Construction /Civil Engineering
- Automobile Technology/Mechanical Engineering
- Electro technology/Electrical & Electronic Engineering

** For positions in **Bio Systems Technology** special consideration will be given to those who have degrees in Bio Systems Technology or any other related degrees specialized in Food Production Technology/ Food Science and Technology / Food Science.

*** For positions in Inter Disciplinary Studies special consideration will be given to the physical science graduates with competency and teaching ability in Information Communication Technology, Physics, Statistics and Mathematics.

### SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| Senior Lecturer Grade I | Rs.91,310-7 x 2,170-106,500/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.79,360-11 x 1,630-97,290/-p.m |
| Lecturer (Unconfirmed) | Rs.69,580-5 x 1,630-77,730 / -p.m |
| Lecturer (Probationary) | Rs.54,600-10 x 1,335-67,950/-p.m |

In addition to the above salary,

1. The following allowances will be paid as the percentage of the basic salary to the academic staff:
   - i) Academic allowance
     - Senior Lecturer Gr.I/Gr.II - 151%
     - Lecturer (Unconfirmed) - 131%
     - Lecturer (Probationary) - 115%
   - ii) Research allowance - 35% (Payable to the Academic Staff based on the research activity)
   - iii) Additional monthly allowance – 20%
2. Cost of living allowance of Rs.7,800/-p.m.

**Statutory benefits:**

- I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above
- II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
- III. Gratuity payments
- IV. Employees' Trust Fund benefits
- V. Free Medical Services

**Closing dates**

Application should reach us on or before **25.09.2020.**

Applications for the posts, completed applications along with **copies of the statement of the Degrees** should be sent to the **Deputy Registrar/ Academic Establishments,** University of Jaffna, Sri Lanka.

Application forms and other details will be available in the University website **www.jfn.ac.lk.** Downloaded application forms should accompany with the paid Bank Slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: 162-1-001-6-0000880 of Bursar, University of Jaffna.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar, Academic Establishments, University of Jaffna, Sri Lanka, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a self – addressed stamped envelope 23x10 c.m. in size along with the paid Bank Slip to the above address.

The candidates who apply for **more than one** position should submit **separate application** along with separate **Bank slip.** The post applied for should be marked on the top left hand corner of the envelope.

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

**Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short- listed applicants will be called for an interview.**

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
25.08.2020

# Edlocate Study Abroad Day 2020

7 நாடுகள் மற்றும் 75 இற்கும் மேலான பல்கலைக்கழகங்களில் இருந்து உங்கள் தெரிவினை மேற்கொள்ள

Australia | New Zealand | Canada | UK | Ireland | Malaysia | Vietnam

ENTRANCE FREE



**29th August'20 |10am – 3 pm**
**Edlocate Jaffna, IIS, No 441, Clock Tower Road, Jaffna**

விண்ணப்பக்கட்டண விலக்குடன் கூடிய உயர் சாதனையாளர்களுக்கான புலமைப்பரிசில் திட்டங்கள்.

## Enrol in over 75 universities in

**Australia (including all GO8) | New Zealand**
**Canada | UK | Ireland | Malaysia | Vietnam**

20 Years of excellence | Personal counselling sessions with experienced professionals | UP TO 100% Scholarships for HIGH ACHIEVERS | Bachelor | Masters PhD Foundation Diploma

FOLLOW US ON

**LODGE APPLICATIONS**
**for 2021 Jan | Feb intakes + limited 2020 Oct | Nov intakes**

edlocate — Reach Light Beyond Borders — www.edlocate.lk
பதிவுகளுக்கு:
**0772223178 | 0215700750**
IELTS/PTE ecExcellence

# Vacancies
## Northern Central Hospital (Private) Limited

Northern Central Hospital is a medical institution which has the privilege of providing quality patient care with compassion and unrelenting attention to clinical excellence, patient safety, passion and commitment to assure best healthcare to those we serve.

If you are truly determined, you are invited to apply for the following positions to join our team.
Ideal applicants should possess following attributes and qualifications.

### 1. Assistant Accountant
- Partly qualified in ICASL/ CIMA/ ACCA or Degree in finance
- Minimum of 3 years experience in Accounting/ Auditing is must
- Exposure in all finance, tax and company aspects
- Knowledge in ERP preferably Tally and exposure to computerized accounting environment
- Good command in English
- Below 40 years of age

### 2. Accounts Assistant
- Completion of GCE A/L in Commerce stream
- Age should be below 25 years
- Minimum of 1 year experience
- Good verbal, written communication skills
- Proficiency in MS office

**A competitive remuneration package and other benefits will be offered as per the industry standards.**

If you are really interested, Please send your CV before 02 nd September 2020, by e-mail or post indicating the position applied for on the top left –hand corner of the envelope.

**Managing Director**
**Northern Central Hospitals (Private) Limited**
**No: 342,Palaly Road, Jaffna.**
**Contact Number- 021 221 9988 / 021 7217324**
**E-mail : northernhrm@gmail.com**

## முதலாம் ஆண்டு சிரார்த்த தினம்



தோற்றம்
25 . 07 . 1934

மறைவு
07 . 09 . 2019

அமரர்

### கதிர்காமத்தம்பி சந்திரசேகரம்

நிஜமாக நீங்கள் மறைந்து
ஓராண்டு ஆனதோ
நீங்கள் இல்லாமனை
பொலிவிழந்து போனதுவோ
உங்களை நினைத்து - தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக்கடந்தாலும் - உங்களை
எங்கள் உள்ளத்தில் வைத்துப்பூஜிப்போம்

அத்தியடி,
யாழ்ப்பாணம்.

தங்கள் பிரிவால் கலங்கி தவிக்கும்
குடும்பத்தினர்

## 31ம் நாள் நீங்கா நினைவலைகள்

### செல்வன் பிரதீபன் தஸ்விகன்

(தரம் –4 மாணவன், யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை)



துள்ளித்திரியும் புள்ளிமான் போல்
துள்ளித்துள்ளித் திரிந்தாயே
துள்ளிய உன்பாத சுவடுகள்
துவண்டுதான் ஓடிச்சென்றாயோ ?
மூன்றாண்டுகள் பள்ளியிலே நீ சாதித்த சாதனைகள்
எத்தனையோ !
மூன்று நூற்றாண்டு கழிந்தாலும் அழியாத கோலமடா
நூற்றாண்டுவிழா நிறைவடைந்து ஓரகவை ஆகும் முன்
உன் அகவை ஓராண்டுடன் நிறைவு பெற்றதடா
இங்கு நீ பதித்த உந்தன் இனிய சுவடுகள்
என்றென்றும் உன் பெயர் சொல்லுமடா !


கருணாகரப் பிள்ளையாரின் பாதங்களில் உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்,
யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் கிருபகாந்தன்

(தபாலக ஊழியர் - யாழ்ப்பாணம்)



தோற்றம் 20.05.1973 மறைவு 25.08.2020

வேலணையைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் கிருபகாந்தன் நேற்று (25.08.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் முத்துநவரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், தம்பிப்பிள்ளை - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், தயாளினியின் (ஆசிரியை - யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், காந்தரூபன் (ஜேர்மனி), முருகானந்த ரூபன் (லண்டன்), காந்தரூபி, விக்கினேஸ்வரன் (யாழ். போதனா வைத்தியசாலை சிற்றூழியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஆர்த்தி, அதியுவன், திவியன் ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பானந்தி (ஜேர்மனி), சத்தியவதனி (லண்டன்), மூர்த்தி, றோகினி, தயாநிதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், இலக்கியன், சங்கீதன், ஜீனோசன், லிகாசனா ஆகியோரின் சிறிய தந்தையும் கன்சிகா, றிஸ்விதா ஆகியோரின் பெரிய தந்தையும், றஜீதரனின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17 / 2, Stanly College Road.
Ariyalai, Jaffna

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
05 . 03 . 1970



மறைவு
24 . 08 . 2020

### திருமதி வாசுகி இரகுநாதன்

(முன்னாள் உரிமையாளர் சுகிவா பாமசி-
திருகோணமலை வீதி, மட்டக்களப்பு)

திருகோணமலை வீதி, மட்டக்களப்பைச் சேர்ந்த திருமதி வாசுகி இரகுநாதன் (முன்னாள் உரிமையாளர், சுகிவா பாமசி, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு) கடந்த (24.08.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. வை.தம்பிரத்தினம் திருமதி த.வள்ளிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், வரணியைச் சேர்ந்த திரு. செ. குணரத்தினம், திருமதி கு.நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், திரு. கு.இரகுநாதனின் (மருந்தாளர்-போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு) அன்பு மனைவியும், செல்வி இ.ரம்ஜா (மருத்துவப்பீடம், பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர), செல்வன் இ.சுகிர்ஜன் (பொறியியலாளர் Synergen Health -Nawala) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சுசிகலா சந்திரகுமாரின் (ஆசிரியர், யாழ்/அச்சுவேலி மத்திய கல்லூரி) பாசமிகு சகோதரியும், செல்வி ச.சகிதாவின் அன்புமிகு பெரியதாயாரும், திரு. சந்திர குமாரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (27.08.2020) வியாழக்கிழமை அன்னாரின் அச்சுவேலி தெற்கு இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 2.00 மணி அளவில் சமயக்கிரியைகள் ஆரம்பித்து அச்சுவேலி தெற்கு முழுங்கன் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P: 071 489 2378

## மரண அறிவித்தல்

பிறப்பு
13 . 12 . 1949



இறப்பு
23 . 08 . 2020

தேச அபிமானி ஸ்ரீ லங்காதிலக

### சுப்பிரமணியம் பாலநாதன்

(Managing Director-Kolanka Pure Silk (Pvt) Ltd,
Managing Director Island Life-Chairman - Handloom Weavers Collective,
President - Hindu Cultural Board of Srimath Anagarika Dharmapala
Humanitarian Foundation, Treasurer - Sri lanka Eye Foundation).

கே.கே.எஸ் வீதி, உடுவில் கிழக்கு, ரொட்டியாலடியைப் பிறப்பிடமாகவும் பலகொல்ல கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாலநாதன் கடந்த (23.08. 2020) ஞாயிற்றுக்கிழமை கண்டியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பீரிஸ் உபயரத்ன-பேபி நோனா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஞானவதியின் ஆருயிர் கணவரும், Dr.பினூஜ் இன் பாசமிகு தந்தையும், Dr.சிஹிக்கவின் அன்பு மாமனாரும், பிவன் சேஷ் இன் அருமை பேரனும், காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் பத்மாதேவி, நடேசன், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், கமலாதேவி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சின்னத் தங்கம் மற்றும் பாலசிங்கம், பொன்மலர், ராஜேஸ்வரி, மகாலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இல.177/A, பலகொல்ல, கெங்கல்லயில் உள்ள அன்னாரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (26.08.2020) நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, மாலை 5.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பல்லேகல பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P: 077 0393389

தகவல்:
Dr.பினூஜ் பாலநாதன்

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 09 |  | 25 |
| 05 | | 08 |
| 1942 | | 2020 |

## மரியாம்பிள்ளை அருளானந்தம்
(இரத்தினம்)

சுண்டிக்குளி பழைய பூங்கா வீதியை பிறப்பிடமாகவும் 158/5, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை அருளானந்தம் நேற்றைய தினம் (25.08.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை-பாக்கியம் (மரியம்மா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா-பரிபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்பு கணவரும், ரமிலா, சாம்சன் (உரிமையாளர்-Lanka Green City (Pvt) Ltd) ஆகியோரின் அன்புத் தந்தையும், மேவின் கிளறென்ஸ் (Royal Marketing Distribution), பூங்குழலி ஆகியோரின் அன்பு மாமனாரும், யோசுவா சாலமோன், லக்ஷாங்கனி, இந்துஷ்யன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான மனுவேல்பிள்ளை, ஜோன்பிள்ளை (குணம்), அந்தோனிப் பிள்ளை (நவரத்தினம்) மற்றும் எலிசபெத் (ராணி) காலஞ்சென்ற எட்வேட் (விசயம்) மற்றும் ஜென்றிக் (இராசக்கோன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 158/5, கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று (26.08.2020) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு, சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

தொ.இ: 0777 386354 (மகன்)

# இளையோர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி

புதுக்குடியிருப்பு பங்கில் உள்ள இளையோருக்கும் யாழ். மறைமாவட்ட இளையோர்ஒன்றியசெயற்குழு உறுப்பினர்களுக்கும் இடையிலான ஒன்று கூடலும் தலைமைத்துவப் பயிற்சியும் நடைபெற்றன.

இந்த நிகழ்வு கடந்த 22, 23 ஆம் திகதிகளில் புதுக் குடியிருப்பு பங்கில் நடைபெற்றது.

இளையோருக்கானதலைமைத்துவத்தைமேம்படுத்தும் விளையாட்டுகள், கருத்துரைகள், அனுபவப் பகிர்வுகள் போன்றன இதன்போது நடைபெற்றன.

நிகழ்வின் வளவாளராக திருமறைக்கலாமன்ற நிர்வாக உறுப்பினர்களில் ஒருவரான கரன்சன்ஜெகன் கலந்து கொண்டார். (ஐ-222)

# ஓராண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 16 |  | 06 |
| 08 | | 09 |
| 1930 | | 2019 |

அமரர் திருமதி
## தையல்நாயகி நல்லையா
திதி: வளர்பிறை அட்டமி

நீங்காத நினைவு தந்து நீண்ட
தூரம் சென்றீர்களோ அம்மா!
ஆண்டொன்று வரும்போதும்
ஓயவில்லை உங்கள் நினைவலைகள்
அன்பான மலர் முகமும்
அழகான முல்லைச் சிரிப்பும்
அகலவில்லை எம் நினைவில்....
அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

42/3, கருவப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

பாசமிகு
குடும்பத்தினர்.

# அரசமைப்பு சபைக்கு மஹிந்தானந்த நியமனம்

கொழும்பு, ஓக.26

அரசமைப்பு சபைக்கான தமது பிரதிநிதியாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நியமிக்கப்பட்டுள்ளார்.

19 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அமைய ஆணைக்குழுக்கள் மற்றும் உயர் பதவிகளுக்கான நியமனங்கள் சபாநாயகர் உட்பட10 பேர் கொண்ட அரசமைப்புச் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

சபாநாயகர் தலைமையில் பிரதமர் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழியாக இந்தச் சபையின் உறுப்பினர்களாவர் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தமது பிரதிநிதியாக தலா ஒருவரை நியமிக்க வேண்டும். சிறு கட்சிகளின் பிரதிநிதியாக ஒருவர் நியமிக்கப்படுவார். அத்துடன் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மூவர் நியமிக்கப்படுவர். அவர்களுக்கான ஒப்புதலை ஜனாதிபதி வழங்க வேண்டும். (எ)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 30 |  | 25 |
| 12 | | 08 |
| 1930 | | 2020 |

## வேலுப்பிள்ளை இராசா
(புகையிரத பயணச்சீட்டு பரிசோதகர்)

மயிலிட்டி வடக்கு காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டி சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை இராசா நேற்று (25.08.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தங்க ரத்தினத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் தங்கராசா (கனடா), இராசலட்சுமி (ராணி), தேவி, நாகேஸ்வரி, சிவமலையநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகுதந்தையும் ஜெயராணி (கனடா) கந்தசாமி, காலஞ்சென்ற வரதராசா மற்றும் கண்ணன், ஜெயராணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, தம்பிராசா, இராசம்மா, முத்துப்பிள்ளை, இராசமணி மற்றும் குஞ்சு (மன்னார்), நடராசா (மன்னார்), கனகலட்சுமி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கனடாவை சேர்ந்த கிருஸ்ணகுமாரி, தர்ஷன், லெனின்மார்க் ஜோண்சன்-தர்ஷனா மற்றும் இராஜசேகரன்- வர்ஷிகா, குணசேகரன்- மைதிலி,லைவுறு- அனுராதா (லண்டன்) , விஜயகோபி- அனுசியா (அபிவிருத்தி உத்தியோகத்தர் உடுவில் பிரதேச செயலகம்) வ.ராஜரூபன் (ஆசிரியர்-யா/நயினாதீவு மகாவித்தியாலயம்), வினோதினி, பிரசாந் தினி, வினோத், அசோக், றமேஸ், கரன்-தர்ஷிகா (சமாதான நீதவான்) மற்றும் லண் டனை சேர்ந்தவர்களான மதன், நிவாஷி ஆகியோரின் பேரனும் கனடாவைச் சேர்ந்தவர்களான விதுஷன், தனுஷன், ருகிஷன், வைஷ்ணவி மற்றும் ரோகித், கஜோனா, சத்ஜன், வைஷ்ணவி, சஷ்மிகா, ஷாசந், ஜனுயன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2020) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 17 |  | 25 |
| 12 | | 08 |
| 1955 | | 2020 |

## மாவை. கிருஸ்ணபிள்ளை வைகுந்தநாதன்
(இளைப்பாறிய சீமெந்து தொழிற்சாலை மின்தொழில்நுட்ப பொறியியலாளர்)

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை வீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாவை. கிருஸ்ணபிள்ளை வைகுந்தநாதன் நேற்று (25.08.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஓய்வுபெற்ற அதிபர் கிருஸ்ணபிள்ளை- கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஓய்வுபெற்ற ஆசிரியர் பசுபதிப் பிள்ளை-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ரஞ்சினிதேவியின் பாசமிகு கணவரும், கோகுலன் (Civil Engineer-Singapore), விதுஷா (HND in Electronic Engineer), சதீஸ் (University College) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மலோஜினி, கமலலோஜினி, நிமலலோஜினி, மீனலோஜினி, புஸ்பலோஜினி, செந்தில்நாதன், சிறீதரன், முரளிதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் வாமதேவன், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் மகேந்திரராஜா, மகேந்திரன், தவச்செல்வி, தவலக்ஸ்மி, வனிதா, சிறீ ஆனந்தகுமார் (Germany), சிறீசிவா (London), சந்திராதேவி (London), ரஜ்வி (Germany) சிறீராசகுமர் (London) சிறீரஞ்சகுமார் (London) ஆகியோரின் மைத்துனரும், ரமணி (London), விக்ரமன் (Germany), காலஞ்சென்ற செந்தில் (Germany) மற்றும் கலைச்செல்வி (London) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.08.2020) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

## தூக்க...

பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டிருந்த நிலையில், அந்தச் சம்பவம் தொடர்பாக தேடப்பட்டுவந்த மற்றோரு சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட பெண்ணின் மாமனாரே பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

"தூக்க மாத்திரைகளை அதிகளவில் சாப்பாட்டில் கலந்து மருமகளுக்குக் கொடுத்தோம். அவள் மயக்கநிலையை அடைந்ததும் உப்பளப் பாத்திக்கு இழுத்துச் சென்று கழுத்தை நெரித்தோம். அதன் பின்னர் அவளது முகத்தை நீருக்குள் அமுக்கிக் கொலை செய்தோம்" என்று சந்கேதநபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

நெடுந்தீவைச் சேர்ந்த டொறிக்கா ஜுயின் (வயது 21) என்ற இளம் பெண் கழுத்து நெரிக்கப்பட்டு கொடூரமாகக் கொலை செய்யப்பட்ட பின் மன்னார் உப்பளத்தில் வீசப்பட்டிருந்தார். அவரது சடலம் மன்னார் உப்பளம் பகுதியில் இருந்து கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை பொலிஸாரால் மீட்கப்பட்டது. சம்பவத்தையடுத்து மன்னார் தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

தடயவியல் பொலிஸாரின் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் தடயப் பொருள்களும் மீட்கப்பட்டன. சட்ட மருத்துவ அதிகாரியின் அறிக்கையின்படி பெண்ணின் கழுத்து நெரிக்கப்பட்டு, அவரது கால்கள், கைகள் பிடித்து வைத்திருக்கப்பட்ட நிலையில் மூச்சுத் திணறலால் உயிரிழந்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் அடையாளங்களைக் கொண்டு அவர் தொடர்பில் மடு (மடு ஆலயத் திருவிழா இடம்பெற்ற காலப்பகுதி) மற்றும் மன்னாரில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதன்போது மன்னாரில் உள்ள உணவகம் ஒன்றில் கொல்லப்பட்ட இளம் பெண், இரு பெண்கள் மற்றும் ஆண் ஒருவரும் சென்று உணவு உட்கொண்ட காட்சி பதிவாகியிருந்தது. அந்தக் காட்சியைப் பெற்ற பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்தனர்.

ஆரம்பத்தில் அந்தப் பெண்கள் நாவற்குழி என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அங்கு அவர்கள் இல்லை. தொடர்ச்சியாக முன்னெடுத்த விசாரணைகளில் கொல்லப்பட்ட பெண் நெடுந்தீவைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் கொல்லப்பட்ட இளம் பெண்ணின் சகோதரி (வயது 30), அவரது பெரியதாயின் மகனின் மனைவி ஆகிய இருவரும் நெடுந்தீவில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், தலைமறைவாகியுள்ள 50 வயதுடைய பிரதான சந்தேக நபரான கொல்லப்பட்ட பெண்ணின் மாமனார் தேடப்பட்டு வந்தார். அவர் நேற்றுமுன்தினம் வவுனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டார். அவரை சட்ட மருத்துவ அதிகாரியின் முன்னிலைப்படுத்திய பின் பொலிஸ் தடுப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ26)

## பொலிஸார்...

தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். அவன் மீது பொய் வழக்குப் போடப்பட்டுள்ளதாகத் தெரிவித்து இளைஞனின் பெற்றோர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாணப் பிராந்தியக் கிளையில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி இரவு 9 மணியளவில் இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர். அதில் ஒருவர் தலைக் கவசம் அணிந்திருக்கவில்லை. பொலிஸாரைக் கண்டதும் இளைஞர்கள் தப்பி ஓட முயற்சித்துள்ளனர். கலைத்துப் பிடித்த பொலிஸார் இளைஞர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு அருகில் வைத்து தாக்குதல் நடத்தியதுடன், அவரை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்.

'பொலிஸ் நிலையத்தில் வைத்தும் தாக்குதல் நடத்தினர். அங்கு வைத்து சாரயத்தை பருக்கி விட்டு, மதுபோதையில் வாகனம் செலுத்தியதாகப் பொய்யான வழக்கைப் பதிவு செய்துள்ளனர்' என்று தாக்கப்பட்ட இளைஞனின் பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர்.

காயமடைந்த இளைஞனை உடனேயே பொலிஸ் பிணையில் தெல்லிப்பழை பொலிஸார் விடுவித்துள்ளனர். அவர் உடனடியாகவே தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்கப்பட்ட முச்சக்கர வண்டிச் சாரதி ஒருவர் கடந்த வாரம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## 4,00,000...

தொழிலை இழந்துள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பொரளைப் பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாங்கள் ஆட்சிக்கு வந்திருந்தால் கொரோனா வைரஸ் நெருக்கடியால் வேலையிழந்த நான்கு இலட்சம் பேருக்கும் புதிய தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்திருப்போம். எவ்வாறாயினும் தற்போதைய அரசு தொழில் இழந்தவர்களுக்காக புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்" என்றார்.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் உரையாற்றினார்கள். (எ22)

## ராஜபக்சக்கள்...

'நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னரும், பின்னரும் சஜித் தரப்புடன் எம்முடன் பேசி வருகின்றார்கள். ஆனாலும் அவர்களுடன் கூட்டுச் சேருவது தொடர்பில் இந்தத் தருணம் வரையில் எந்தவொரு இறுதி முடிவும் எடுக்கவில்லை' என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

பேச்சுக்கள் இடம்பெற்று வருவது தொடர்பில் சஜித் பிரேமதாசவிடம் கேட்டபோது, யாருடன் நாம் பேச்சு நடத்தினால் என்ன?, எந்த அணியுடன் பேச்சு நடத்தினால் என்ன? இந்த அரசை, ராஜபக்சக்கள் அரசை விரைவில் நாம் கவிழ்ப்போம்.

மைத்திரிபாலசிறிசேனவுடன்மாத்திரமோ அல்லது அவரது அணியுடன்மாத்திரமோ நாம் பேச்சு நடத்தவில்லை. ராஜபக்ச அரசில் உள்ள அதிருப்தி உறுப்பினர்களுடனும் பேச்சு நடத்துகின்றோம். இந்த அரசை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுள்ள அரசு என்று சொல்ல முடியாது. கடும் அதிருப்திக்குள்ளான அரசு என்றுதான் சொல்ல முடியும். அந்தளவுக்கு ராஜபக்ச அரசினுள் அதிருப்தி உறுப்பினர்கள் இருக்கின்றார்கள்.

எதிரணிகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் அவர்கள் பலத்துடன்தான் இருக்கின்றார்கள். சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாத்திரமல்ல, ராஜபக்சக்கள் அரசிலிருந்து விலகி எவர் வந்தாலும் அவர்களையும் இணைத்துப் பயணிப்போம். ராஜபக்சக்கள் அரசு நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்காது, என்றார். (ஒ,5,22)

## 13 ஐ ஒழி...

படுத்தப்பட வேண்டும் என்பதே தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நிலைப்பாடாகும். இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே இலங்கையில் மாகாண சபை முறைமையை உருவாக்குவதற்காக 13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. எனவே, இந்த விடயத்தில் இலங்கை தன்னிச்சையாகச் செயற்பட முடியாது. முக்கியமாக இந்தியாவைப் பகைத்துக்கொண்டு அதை நீக்கினால் நெருக்கடிகள் ஏற்படக்கூடும்.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருக்கும்போது 13 பிளஸ் எனக் கூறினார். இன்று கூட அவரோ அல்லது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவோ 13 ஐ நீக்குவது தொடர்பில் கருத்து வெளியிடவில்லை. தமது வாக்கு வங்கியை அதிகரித்துக் கொள்வதற்காகவே 13ஆவது திருத்தம் நீக்கப்படவேண்டும் எனச் சிலர் வலியுறுத்தி வருகின்றனர். இதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்.

வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல நாட்டில் ஏனைய 7 மாகாணங்களிலும் மாகாண சபைகள் இயங்கின. முதல்வர்கள் தெரிவானார்கள். எனவே, மாகாண சபை முறைமையைப் பலப்படுத்த வேண்டுமே தவிர அதனைப் பலவீனப்படுத்தக்கூடாது. எவ்வித அதிகாரக் குறைப்பும் இன்றி 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நிலைப்பாடாகும்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியில் மூன்று கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. இந்த மூன்று கட்சிகளும் இணைந்து பயணித்தாலேயே எமக்கான பிரதிநிதித்துவத்தைப் பாதுகாத்துக்கொள்ளக்கூடியதாக இருந்து. எனவே, வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்க் கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டும் என்றார். (எ22)

## பால்...

வர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். மன்னாரைச் சேர்ந்த செய்யது முகமது சிறாஜ் (வயது30) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மன்னாரில் இவரது குடும்பத்தினர் வசிக்கின்றனர். இவர் முள்ளியவளையில் உள்ள சட்டபூர்மற்ற மனைவியின் வீட்டுக்குப் பால் காய்ச்ச வந்தபோது இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி இந்தச் சம்பவம் நடந்துள்ளது. பால்காய்ச்சும்போது அடுப்புக்கு அருகில் இருந்த மண்ணெண்ணை போத்தல் சரிந்து விழுந்ததில் இவர் மீது தீப்பற்றிக் கொண்டுள்ளது. அதையடுத்து அவர் அயலவர்களால் மீட்கப்பட்டு மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவனைக்கு மாற்றப்பட்டார்.

போதனா மருத்துவமனையில் சிகிச்சையளிக்கப்பட்டு வந்தநிலையில், சிகிச்சை பயனின்றி நேற்று அவர் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிரேமகுமார் மேற்கொண்டார். விசாரணைகளின் பின்னர் உடல் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (எ26,25)

## இந்திய...

துள்ளார் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் இரத்துச் செய்யப்படுவதுடன், 13ஆவது திருத்தமும் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று அரச தரப்பில் கூறப்படுகின்றது.

மாகாண சபைகள் இல்லாது மாகாணங்களின் நிர்வாகம் ஜனாதிபதியின் பிரதிநிதியான ஆளுநர்களால் முன்னெடுக்கப்படுவதால், மாகாண சபை முறைமை தேவையில்லை, முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது.

ஆனால் 19ஆவது திருத்தத்தை இலகுவாக இரத்துச் செய்தாலும், 13ஆவது திருத்தத்தை அவ்வளவு இலகுவாக இரத்துச் செய்ய முடியாது. 13ஆவது திருத்தம் இந்தியாவின் தலையீட்டால் உருவாக்கப்பட்டது. அவர்கள் இலங்கையின் நட்பு நாடாக இருப்பதால் இந்த விடயத்தின் தீவிரத் தன்மை தொடர்பாக அவதானம் செலுத்துவார்கள்.

அதேவேளை, நல்லாட்சி அரசு உள்ளூராட்சித் தேர்தலில் தோல்வியடைந்ததை அடுத்து உரிய காலத்தில் மாகாண சபைத் தேர்தலை நடத்தாது பிற்போட்டது. அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவு வழங்கியது. என்றார். (எ)

## தவறான...

பிள்ளைகளின் தாய் ஒருவர் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

ரஜீவ்காந்த் நந்தினிதேவி என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. சகோதரர்களுடன் ஏற்பட்ட முரண்பாட்டின் பின்னரே அவர் தீயிட்டுக் கொண்டுள்ளார் என்று விசாரணையில் தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் காலை அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிரேமகுமார் மேற்கொண்டார் (எ26,25)

## இளைஞர்...

நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதேவேளை, இந்த முரண்பாட்டில் காயமடைந்த மேலும் ஐந்து பேர் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இராமநாதபுரம், 6ஆம் யுனிற்றைச் சேர்ந்த செல்வநாதன் பிரணவன் (வயது 19) என்பவரே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ6)

# 20ஆவது திருத்தம் ஊடாக கலப்பு தேர்தல் முறைமை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 26

20ஆவது அரசமைப்பு திருத்தத்தின் ஊடாக தொகுதிகளுக்கு பொறுப்புக்கூறும் நாடாளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கும் நோக்குடன் கலப்பு தேர்தல் முறைமையை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், இரட்டை பிரஜாவுரிமையுள்ள ஒருவருக்கு புதிய அரசியல் திருத்தத்தின் ஊடாக நாடாளுமன்றம் செல்ல முடியுமா? என்று கேள்வியெழுப்பப்பட்டது.

அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், இரட்டை பிரஜாவுரிமை உள்ள ஒருவருக்கு எதிராக இதனை ஏன் செய்தார்கள் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாட்டின் நலனுக்காக இதனை செய்தார்களா. அரசியல் கலாசாரம் சட்டம் முதலானவற்றை சிந்தித்து பார்த்து இதனைச் செய்யவில்லை. உண்மையில் போலியான நடவடிக்கையே இது. ராஜபக்ச குடும்பம் ஒரு போதும் அரசியலுக்கு வரக்கூடாது என்ற எண்ணத்துடனேயே இதனை மேற்கொண்டனர். தூரநோக்குடன் கொண்டுவரப்பட்ட சட்ட திருத்தம் அல்ல. தனிப்பட்டவரை கேந்திரமாகக் கொண்டே இது கொண்டு வரப்பட்டது என்றார்.

புதிய திருத்தம் மேற்கொள்ளப்படுவதன் மூலம் தேசிய பட்டியலில் ஒருவர் விலகுவதன் மூலம் அந்த பட்டியல் ஊடாக பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் செல்வாரா என்ற எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில், அது அரசியல் தீர்மானம். அது உரிய நேரத்தில் தீர்மானிக்கப்படும். நாடு குறித்து சிந்தித்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றார்.

துணை பிரதமர் பதவி தொடர்பில் அரசில் எவ்வித உத்தியோகபூர்வ பேச்சும் இல்லை. அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

19ஆவது அரசமைப்பில் காணப்படும் நெருக்கடிகளைச் சீர்செய்வது இதன் நோக்கமாகும். அப்போதைய இந்தத் திருத்தத்தால் நாட்டின் பாதுகாப்பு, ஜனநாயகம், பொருளாதாரம் என்பன சீர்குலைந்துள்ளன. என்று மேலும் தெரிவித்தார். (து)

## மாணவன் படுகொலை; இதுவரை ஐவர் கைது

மட்டக்களப்பு,ஓக.26

ஏறாவூர், கொம்மாந்துறையில் 15 வயதானசிறுவன்வெட்டிக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில், இதுவரையில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலையில் வைத்து தான் தாக்கப்பட்டமைக்குநியாயம்கோருவதற்காக தனது உறவினருடன், தாக்கியவர்களைச் சந்திக்க சென்றிருந்த வேளையில், சிறுவன் வாளால் வெட்டிக்கொல்லப்பட்டார்.

சம்பவம்தொடர்பாகஏறாவூர்பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். இதுவரைஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் 19 முதல் 23 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்று பொலிஸார்தெரிவித்தனர்.

அத்துடன்கொலைக்குப்பயன்படுத்தப்பட்ட வாளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. (க)

## வீரசேகர, விமல், கம்மன்பிலவை அரசு கண்டுகொள்ளவேமாட்டாது

### கூறுகின்றார் சி.வி.கே. சிவஞானம்

யாழ்ப்பாணம், ஓக. 26

தமிழர்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வின் ஆரம்பப் புள்ளியாகக் கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமை நீக்கப்படக்கூடாது என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், தற்போதைய அரசில் அங்கம் வகிக்கும் சரத் வீரசேகர, விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரின் கருத்துக்களை அரசுகூட கணக்கில் எடுக்காது என்றும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபை முறைமை தனியே அது வடக்கு கிழக்குக்கு மட்டுமன்று உருவாக்கப்படவில்லை. நாட்டின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் என்றே உருவாக்கப்பட்டது. எனினும் அந்த மாகாண சபை முறைமைகூட போதாது. அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்று தமிழ் மக்களாகிய நாம் கோரி வருகின்றோம். ஏனெனில், மத்தியில் மட்டும் அதிகாரங்கள் நாட்டுக்கு நல்லதல்ல, நாட்டில் வாழும் சிறுபான்மை இனத்துக்கு நல்லதல்ல.

மத்தியில் மட்டும் அதிகாரங்கள் குவிக்கப்படாமல் மாகாணங்களுக்கும் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். மாகாண சபைகளுக்கு காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். என்றார். (த-20)

## 6–13 வகுப்புகள் 2லிருந்து நடைபெறும் 1–5 வகுப்புகள் 8லிருந்து நடைபெறும்

கொழும்பு, ஓக. 26

தரம் 6 தொடக்கம் 13 வரையான வகுப்புகள் எதிர்வரும் 2ஆம் திகதி புதன்கிழமையிலிருந்து நடைபெறும் என்று கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அதுபோன்று தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புகள் எதிர்வரும் 8ஆம் திகதியிலிருந்து நடைபெறும் என்று கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றினூடாக குறிப்பிட்டுள்ளது.பாடசாலை நேரம் காலை 7.30 தொடக்கம் மதியம் 1.30 வரை என்று முன்னரே அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## பேருந்திலிருந்து இறக்கி வாளால் வெட்டிய குழு

### வரணியில் நேற்றிரவு சம்பவம் இளைஞர் மருத்துவமனையில்

கொடிகாமம், ஓக. 26

தென்மராட்சி வரணியில் இயற்றாலையில் பேருந்தை வழிமறித்து அதில் பயணித்த இளைஞனை இழுத்துச் சென்று பேருந்திலிருந்து இறக்கி வாளால் வெட்டிக் காயப்படுத்திவிட்டுச் சென்றுள்ளது ஒரு குழு. படுகாயமடைந்த அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் நேற்றிரவு 7 மணியளவில் இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இதே பகுதியைச் சேர்ந்த சாந்தகுமார் சதுசன் (வயது -20) என்பவரே படுகாயமடைந்தார்.

சுட்டிபுரம் பகுதியில் நின்றிருந்த இனந்தெரியாத கும்பல் ஒன்று பேருந்தை வழிமறித்து பேருந்திலிருந்து அந்த இளைஞனை இறக்கி வாளால் வெட்டி படுகாயப்படுத்திவிட்டு தாவளை இயற்றாலைக்கு செல்லும் வீதியில் பாரதி வீதிச் சந்தியில் போட்டுவிட்டுச் சென்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.கொடிகாமம் பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (த159)

உடன் தேவை
சமையல் உதவியாள்ர்
உணவு பரிமாறுபவர்
தென் இந்திய உணவு தயாரிப்பாளர்
தொடர்புகளுக்கு:
076 000 1695, 077 844 3590

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
A/L தொழில்நுட்ப பிரிவு 2022
● பொறியியல் தொழில்நுட்ப
● உயிர்முறைமைகள் தொழில்நுட்ப
● தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
29.08.2020 சனிக்கிழமை
காலை 7.00
தொடர்பு:- 077 0175346

Mora E Tamils
MORA EXAMS 2020
மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்கள் நடாத்தும் க.பொ.த உயர்தர கணித, விஞ்ஞான மாணவர்களுக்கான முன்னோடி பரீட்சை ஆனது 11வது முறையாக நடைபெறவுள்ளது.
புரட்டாதி 05 – 20 வரை பரீட்சைகள் இலங்கை முழுவதும் நடைபெறும்.
இன்று முதல் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை அனைத்து மாவட்டங்களின் பிரபல தனியார் கல்வி நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
மேலதிக தகவல்களுக்கு:
moraetamils@gmail.com
076 464 4801
www.moraetamils.com
/Mora E-Tamils
விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதி
30.08.2020
-பரீட்சைக் குழு-
மொறட்டுவைப் பல்கலைக்கழக
பொறியியற் பீட தமிழ் மாணவர்கள்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.